மற்றம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

விலை ரூ.15 மலர் 22 | இதழ் 11 மார்ச் 2021

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவி குழுக்களுக்கான மாத இதழ்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் சுய உதவி குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் மாநில அளவிலான விற்பனை கண்காட்சி

திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

மார்ச் 2021

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

அனைத்துத் துறைகளிலும் சாதனை படைத்து வருபவர்கள் பெண்கள். ஒரு பெண் முன்னேற்றம் அடையும் போது அந்தப் பெண்ணின் குடும்பமும் சேர்ந்தே பயனடைகிறது. தடைகளைத் தகர்த்து தன்னலமற்று செயல்படும் வலிமை கொண்ட பெண்களை சிறப்பிக்கும் வகையில் ஆண்டுதோறும் மார்ச் 8ஆம் தேதி மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. இந்த வருடம் பெண்கள் தினத்திற்கான வாசகம் `தலைமைப் பொறுப்பில் பெண்கள் கோவிட் 19 உலகில் சமத்துவ எதிர்காலத்தை சாதித்தல்" என்பதாகும்.

இன்று நமது சுய உதவி குழு பெண்களும் பல்வேறு சாதனைகளுக்கு உரியவர்களாக இருக்கின்றனர். ஒற்றுமை, விடா முயற்சி, அயராத உழைப்பு என தங்களின் தன்னலமற்ற பணிகளில் அர்ப்பணிப்புடன் செயல்படும் சுய உதவிக்குழு பெண்கள் சமத்துவத்தை உறுதி செய்யும் எதிர்காலத்தை நோக்கி சவால்களை வெற்றி கொண்டு பயணிக்கிறார்கள்.

பெண்களின் முன்னேற்றத்திற்காக நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் அயராத செயல்பாட்டின் விளைவாக இன்று சுய உதவிக் குழு பெண்கள் பல்வேறு பொருட்களை தரமான முறையில் தயாரித்து விற்பனை செய்வது, நிலங்களை குத்தகைக்கு எடுத்து இயற்கை விவசாயம் செய்வது, விவசாயத்திற்கு பயன்படும் நவீன கருவிகளை வாடகைக்கு விடுவது, மனநலம் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிந்து அவர்களுக்கு உரிய மருத்துவ சிகிச்சை பெற உதவுவது என பல்வேறு தளங்களிலும் உயிர்ப்புடன் செயல்பட்டு வருகின்றனர்.
மகளிர் தினத்தை முன்னிட்டு கடந்த மாதம் நமது அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்ற சுய உதவி குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் விற்பனை கண்காட்சிக்கு மக்கள் தந்த பெரும் ஆதரவு ஒருபக்கம்;
வாராக்கடன்கள் நிறைந்த வங்கித் தொழிலில், பெற்ற கடனை முன்னதாகவே முழுமையாகச் செலுத்தும் சுய உதவிக் குழு மகளிருக்கு வங்கியாளர்கள் தரும் பாராட்டு மறுபக்கம் என வெற்றிக் கதைகளின் எண்ணிக்கை தொடர்கிறது.

தன் வீடு, தன் குடும்பம், தன் வளர்ச்சி என குறுகிய வட்டத்தில் செயல்படாமல், பிறர் நலன் நாடும் தன்னலமற்றவர்களாக நம் சுய உதவிக் குழு மகளிர் உள்ளனர் என்பது பெருமையாக உள்ளது. உங்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து வரும் மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் அங்கமாக செயல்படும் ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்கள், தீனதயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா போன்றவை தொடர்ந்து உங்களுக்குத் தேவையான உதவிகளை செய்ய தயாராக உள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களின் செயல்பாடுகளுக்கு தடைகள் வரலாம். அவற்றை நீங்கள் புறந்தள்ளி விட்டு உங்களின் கடமையை மட்டுமே கண்ணாகக் கொண்டு செயல்பட்டு,

"இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்"

என்ற குறள் வாக்கிற்கேற்ப உங்களின் அனைத்து செயல்பாடுகளும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த சில மாதங்களாக குறைந்து வந்த கொடிய வைரஸான கொரோனாவின் தாக்குதல் மீண்டும் சில இடங்களில் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டு விட்டது, அதனால் கொரோனாவைக் கண்டு அச்சப்படத் தேவையில்லை என்ற நிலைப்பாட்டிற்கு இடமின்றி நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். முகக் கவசம் அணிதல், கூட்டமாக இருப்பதை தவிர்த்தல், அடிக்கடி சோப்பு போட்டு கைகளைக் கழுவுதல், உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ பரிசோதனையை மேற்கொள்ளுதல் போன்றவற்றை சுய உதவிக் குழுவினர் மேற்கொள்வதுடன் மற்றவர்களையும் அவசியம் கடைபிடிக்கும்படி வலியுறுத்த வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். அனைவருக்கும் சித்திரைத் திருநாள் தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,

மேலாண்மை இயக்குநர்

குறளும்-பொருளும்

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி

முன்னே தான் சமமாக இருந்து, பின்பு பொருளைச் சீர்தூக்கும் துலாக்கோல் போல் அமைந்து, ஒரு பக்கமாக சாயாமல் நடுவுநிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழகாகும்.

உள்ளடக்கம்...

மாநில அளவிலான விற்பனை கண்காட்சி	05
சுய உதவி குழுவினருக்கான வங்கி கடன் இணைப்பு - மண்டல அளவிலான வங்கியாளர் ஆய்வு கூட்டம்	07
மனம் இனிது, மனநல திட்டம்	08
தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் கடனுதவி வழங்கப்பட்டது	09
மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் கருத்தரங்கம்	11
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் தேர்தல் விழிப்புணர்வு பிரச்சாரம்	12
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்	20
முற்றக் கச்சேரி	29

இன்பாக்ஸ்

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் | wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

முற்றம் மாத இதழ்
ஆசிரியர்,

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்

மலர் 22
இதழ் 11
மார்ச் 2021
விலை ரூ.15

கௌரவ ஆசிரியர்கள் — **திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப.,** மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., செயல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தலைமை செயல் அலுவலர் (பொ), தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர் — **எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு — **ஜா. சம்பத்,** கூடுதல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜே. கணேஷ் கண்ணா, கூடுதல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

எஸ். சாமுவேல் இன்பதுரை, கூடுதல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

கோ. லட்சுமிபதி, கூடுதல் இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

நிர்வாக ஆசிரியர் — **ரா. ஜீவா,** பொது மேலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

நிதி நிர்வாகம் — **சு. இராமலெட்சுமி,** நிதி ஆலோசகர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர் — **எஸ். விஜயலட்சுமி,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

துணை ஆசிரியர் — **ஏ. கண்ணன்**

முதுநிலை கணக்காளர் — **சு. சசிகலா**

பிழை திருத்துபவர் — **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**

கணினி வடிவமைப்பு — **ஆ. சுரேஷ் பாபு**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்', தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413
தொலைநகல் : 044 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

ஜனநாயக கடமையை ஆற்றுவோம்...

அன்புள்ள வாசகர்களுக்கு

ஏப்ரல் மாதத்தில் இலையுதிர் காலம் முடிந்து புதியதாக துளிர்கள் விட்டு பூவாகவும், காயாகவும், பழமாகவும் பலன் கொடுக்க தொடங்கும் காலம் இது. அதோடு தமிழ் புத்தாண்டும் பிறக்க உள்ளது.

ஏப்ரல் மாதம் மேலும் ஒரு நிதி ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றோம். நமது நாட்டின் நிதி ஆண்டானது ஏப்ரல் 1ம் தேதி தொடங்கி அடுத்து வரும் மார்ச் 31ம் தேதி வரையிலானது. நிதியாண்டின் வரவு செலவு கணக்குகள் மார்ச் 31ம் தேதியோடு முடிக்கப்பட்டுவிடும். சுய உதவிக் குழுக்களும் 2020-2021 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை அங்கீகரிக்கப்பட்ட தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்பட்டு, வரவு செலவினை நிதி அறிக்கையாக தயார் செய்து அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரிவித்து அவர்களின் ஒப்புதலும் பெற வேண்டும்.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தமிழக சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளதை நாம் அனைவரும் அறிவோம். எனவே, சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அனைவரும் சட்டசபைக்கு நடைபெறும் வாக்களிப்பில் கலந்து கொண்டு உங்களின் ஜனநாயக கடமையை சரியாகவும், நேர்மையாகவும் நிறைவேற்றுவதன் மூலம் உங்கள் பிரச்னைகளுக்கு தீர்வு காணக்கூடிய பிரதிநிதிகளை தேர்வு செய்து சட்டசபைக்கு அனுப்புவது அனைவரின் கடமையாகும்.

கொரோனா பெருந்தொற்று காரணமாக கல்வி நிறுவனங்கள் சரிவர இயங்க முடியாத சூழ்நிலையால் 9, 10 மற்றும் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் அனைவரும் தேர்ச்சி பெற்றவர்களாக அரசு அறிவித்திருக்கின்றது. பல மாணவர்கள் இந்த அறிவிப்பையே சாதகமாக எடுத்துக் கொண்டு பள்ளிக்குச் செல்லாமலும், வீட்டிலும் படிக்காமல் இருப்பார்கள். எனவே, இப்படிப்பட்ட இந்தச் சூழலில் பெற்றோர்கள் மிக கவனமுடன் பிள்ளைகளைக் கண்காணிக்க வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

உலகெங்கும் பரவியுள்ள தமிழர்கள் அனைவருக்கும் முற்றம் தனது தமிழ் புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது.

இப்படிக்கு,



(எஸ்.சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் மகளிர் சுய உதவி குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் மாநில அளவிலான விற்பனை கண்காட்சி 19.02.2021 முதல் 09.03.2021 வரை நடைபெற்றது.

மகளிர் சுய உதவி குழுவினரால் தயாரிக்கப்படும் பொருட்களை கிராம அங்காடிகள், கல்லூரி சந்தைகள், வட்டார, மாவட்ட, மாநில அளவிலான கண்காட்சிகள் மற்றும் தேசிய அளவிலான சாராஸ் கண்காட்சிகள் வாயிலாக விற்பனை செய்வதற்கு ஏதுவாக பல்வேறு விற்பனை கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இக்கண்காட்சிகளில் தமிழகத்தின் அனைத்துப் பகுதியிலும் செயல்படும் மகளிர் சுய உதவி குழுவினரால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் நேரடியாக விற்பனை செய்யப்படுகிறது. இதன் மூலம் மகளிர் சுய உதவி குழுவினருக்கு உரிய விலை கிடைப்பதோடு, வாடிக்கையாளர்களும் தரமான பொருட்களை நியாயமான விலையில் பெற முடிகிறது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் மகளிர் சுய உதவி குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் மாநில அளவிலான விற்பனை கண்காட்சியினை 19.02.2021 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து, அங்கு அமைக்கப்பட்டிருக்கும் அரங்குகளை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர்கள் திரு. ஜா. சம்பத், திரு. ஜெ. கணேஷ் கண்ணா, திருமதி கே. சுமதி, திரு. எஸ். சாமுவேல் இன்பதுரை, பொது மேலாளர், இணை இயக்குநர்கள், அலுவலர்கள், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இக்கண்காட்சி 19.02.2021 அன்று துவங்கி 09.03.2021 வரை நடைபெற்றது. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பட்டு, பருத்தி ஆடைகள், மண்பாண்ட பொருட்கள், செயற்கை ஆபரணங்கள், பல்வேறு உலோகங்களால் உற்பத்தி செய்யப்படும் கைவினை பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், சணல், காகிதம், பனை ஓலை மற்றும் வாழை நார் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட பொருட்கள், பல்வேறு தோல் பொருட்கள், வாசனைப் பொருட்கள், மூலிகைப் பொருட்கள், அனைவருக்கும் ஏற்ற தரமான ஆயத்த ஆடை வகைகள் உள்ளிட்ட பல்வேறு வகையான பொருட்கள் இக்கண்காட்சியில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. மேலும் கண்முன்னே சமைக்கப்படும் அறுசுவை மிகுந்த பாரம்பரிய கிராமிய உணவுகளை உண்டு மகிழ்வதற்கென தனி வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேலும் இக்கண்காட்சியில் அரசு நிறுவனங்களான கோஆப் டெக்ஸ், பூம்புகார் மற்றும் டாம்ப்கால் பொருட்களும் விற்பனை செய்யும் அரங்குகளும், மூத்த குடிமக்கள் மற்றும் அனைத்து தரப்பினரின் நல வாழ்விற்கும் உரிய ஆலோசனைகளை வழங்கும் நலவாழ்வு மையம், சித்தா மற்றும் யோகா மையம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பு ஆலோசனைகளை

வழங்கும் காவல்துறை மையம் ஆகியனவும் அமைக்கப்பட்டிருந்தன. கண்காட்சி நடைபெறும் நாட்களில் பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

சுய உதவி குழுக்கள் தயாரிக்கும் தரமான பொருட்களை அனைத்துத் தரப்பினரும் வாங்கி பயன்பெறும் வகையில் 19.02.2021 முதல் 09.03.2021 வரை நடைபெற்ற இக்கண்காட்சியில் ரூ. 23,41,878/- மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

சுய உதவி குழுவினருக்கான வங்கி கடன் இணைப்பு – மண்டல அளவிலான வங்கியாளர் ஆய்வு கூட்டம்

மகளிர் சுய உதவி குழுவினருக்கான வங்கி கடன் இணைப்பு தொடர்பாக மண்டல அளவிலான வங்கியாளர் ஆய்வு கூட்டம் 17.02.2021 அன்று கடலூர் மாவட்ட ஆட்சியரக கூட்ட அரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் கடலூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களின் மகளிர் திட்ட இயக்குநர்கள், மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர்கள், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர்கள், முன்னோடி வங்கி மேலாளர்கள், மண்டல அளவிலான அனைத்து வங்கி மேலாளர்கள் மற்றும் மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஆகியோர் பேசும்போது, சுய உதவி குழுவினர் கடனை முழுமையாகத் திரும்ப செலுத்தி வருவதால் அதிக தொடர்ச்சியாக வங்கி கடன் இணைப்பினை மகளிர் சுய உதவி குழுக்களுக்கு வழங்கிட வங்கியாளர்களுக்கு ஆலோசனை வழங்கினார்கள். மேலும், வங்கி கடன் பெறும் சுய உதவி குழுக்கள் கடனைத் திரும்ப முறையாக செலுத்துவதற்கு ஒவ்வொரு வங்கி கிளை மேலாளர் தலைமையில் கடனைத் திரும்ப செலுத்தும் குழுவானது சமுதாய அமைப்பாளரின் பங்களிப்புடன் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

‘இதர கடன் இணைப்புகளை விட சுய உதவி குழுக்களுக்கு வழங்கப்படும் கடனானது முறையாக திரும்ப செலுத்துவதால் லாபகரமாக உள்ளது’ என வங்கியாளர்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் திரு. கணேஷ் கண்ணா, முதுநிலை ஆலோசகர் திரு. திருநாவுக்கரசு ஆகியோர் ‘வங்கி கடன் இணைப்பு பற்றியும், கடன் திரும்பச் செலுத்திடும் முறைகள் பற்றியும்’ விளக்கி கூறினார்கள். முன்னதாக கடலூர் மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திருமதி. பூ. காஞ்சனா அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்று வரவேற்புரை ஆற்றினார்.

மனம் இனிது மனநல திட்டம்

தமிழகத்தில் கடலூர், ஈரோடு, இராமநாதபுரம், சேலம், தஞ்சாவூர் மற்றும் திருச்சி ஆகிய ஆறு மாவட்டங்களில் “மனம் இனிது மனநல திட்டம்” செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வட்டாரத்தில் மனம் இனிது மனநல திட்டம் முன்னோடியாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் விருத்தாச்சலம் வட்டாரத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் தலா ஒரு சமுதாய வள பயிற்றுநர் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு மனநல திட்டம் தொடர்பாக பயிற்சி வழங்கப்பட்டு, மன அழுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

மனம் இனிது மனநல திட்டம் கடலூர் மாவட்டத்தில் முன்னோடியாக செயல்படுவதாலும், மன அழுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் கண்டு அவர்கள் சிகிச்சை பெற்றிட மருத்துவமனைக்கு பரிந்துரை செய்வதில் சிறந்து விளங்கும் மாவட்டம் என்பதாலும், மனம் இனிது திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிடவும், இப்பணிகளை சிறப்பாக மேற்கொள்ளும் சமுதாய வள பயிற்றுநர்களை ஊக்கப்படுத்திடவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்களும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்களும் 17.02.2021 அன்று கடலூர் மாவட்டத்திற்கு வருகை புரிந்து கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் சமுதாய வள பயிற்றுநர்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்டனர்.

மன அழுத்தம் காரணமாக மனநலம் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணும் வழிமுறைகள், அவர்களுக்கு உரிய ஆலோசனைகள் வழங்குதல், சிகிச்சை பெற மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தல் ஆகியவை குறித்து, கடலூர் மாவட்ட மனநல மருத்துவர் திரு. கே. சத்தியமூர்த்தி அவர்களின் குழுவினரால் பயிற்சி வழங்கப்பட்டது.

மனநலம் தொடர்பான பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வரும் சென்னை SCARF நிறுவனத்திலிருந்து டாக்டர் தாரா மற்றும் திரு. கோட்டீஸ்வரன் ஆகியோர் அடங்கிய குழுவினர் மனநலத் திட்டம் தொடர்பான ஆலோசனைகளை சமுதாய வள பயிற்றுநர்களுக்கு வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள் திரு. கணேஷ் கண்ணா, திருமதி எஸ். சுமதி, திட்ட ஒருங்கிணைப்பாளர் (TNVRC) திருமதி காளத்தி மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக கடலூர் மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திருமதி. பூ. காஞ்சனா அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்று வரவேற்புரை ஆற்றினார்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் சென்னையில் 1650 தெருவோர வியாபாரிகளுக்கு பிரதம மந்திரி தெருவோர வியாபாரிகள் ஆத்ம நிர்பார் நிதி திட்டத்தின் கீழ் ரூ. 1.65 கோடி கடனுதவி வழங்கப்பட்டது

பிரதம மந்திரி தெருவோர வியாபாரிகள் ஆத்ம நிர்பார் நிதி திட்டத்தின் கீழ் தெருவோரங்களில் கடைகள் வைத்திருக்கும் சிறு வியாபாரிகளுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் ரூ. 10 ஆயிரம் வங்கிக் கடன் வழங்கப்படுகிறது.

அதன்படி சென்னையில் பல்வேறு இடங்களில் உள்ள 1650 தெருவோர வியாபாரிகளுக்கு தலா. ரூ. 10 ஆயிரம் வீதம் பிரதம மந்திரி தெருவோர வியாபாரிகள் ஆத்ம நிர்பார் நிதி திட்டத்தின் கீழ் ரூ. 1.65 கோடி கடனுதவி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்தியன் வங்கி, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா மற்றும் பிற வங்கிகள் மூலம் 25.02.2021 அன்று வழங்கப்பட்டது.

இதன் ஒருபகுதியாக சென்னை, கிண்டியில் உள்ள நகர்ப்புற வாழ்வாதார இயக்க அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 60 தெருவோர வியாபாரிகளுக்கு தலா ரூ. 10 ஆயிரம் வீதம் ரூ. 6 இலட்சம் கடனுதவியினை வழங்கிய தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள், "தெருவோர வியாபாரிகள் இந்தத் தொகையினை முறையாக பயன்படுத்தி தாங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்றும், இக்கடனை முறையாக திரும்பச் செலுத்தும் பட்சத்தில் வட்டியில் 7 சதவிகிதம் மானியமாக திரும்ப வழங்கப்படுவதுடன், மின்னணு பணபரிவர்த்தனையை பயன்படுத்துவதன் மூலம் மாதம் ரூ. 100/- வீதம் கடன் திரும்ப செலுத்தும் காலமான 12 மாதத்திற்கும் வழங்கப்படுவதுடன், 12 மாதங்களுக்கு பிறகு இக்கடன் தொகை ரூ.20 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்" என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் / சென்னை மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் (கூடுதல் பொறுப்பு) திருமதி. பெ. விஜயலட்சுமி, இணை இயக்குநர் திருமதி எஸ். பாரிஜாதம், இணை இயக்குநர் திருமதி லதா பிரபாகர், உதவித் திட்ட அலுவலர் திருமதி விஜயலட்சுமி, மாநில வல்லுநர்கள் திரு. மூர்த்தி, திரு. மணிராஜ், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் துணை பொது மேலாளர் திரு. ஹிமான்சு பி. பாண்டா, முன்னோடி வங்கி மேலாளர் திரு. கிருஷ்ணன் உள்ளிட்ட வங்கியாளர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் திரு. பாஸ்கர், திரு. சுரேஷ், திரு. செந்தில் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுவினரின் தேர்தல் உறுதிமொழி

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் சார்பில் தேர்தல் விழிப்புணர்வு உறுதிமொழி எடுக்கும் நிகழ்வு ஈசான்ய மைதானத்தில் 18.02.2021 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சுய உதவி குழுவினைச் சேர்ந்த சுமார் 1500 பெண்கள் 100% வாக்களிக்கவும், ஜனநாயக அடிப்படையில் நேர்மையுடன் வாக்களிக்கவும் உறுதிமொழி எடுத்தனர். இந்நிகழ்ச்சியின் போது இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் ஒருவிரல் வாக்குப்பதிவு போன்ற வடிவங்கள் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மேலும், இந்நிகழ்ச்சியின் போது, பள்ளி மாணவர்களால் பாரம்பரிய கலையான கரகாட்டம், பறை அடித்தல், நாட்டுப்புற பாடல்கள் போன்றவற்றின் மூலம் ஜனநாயக அடிப்படையில் நேர்மையுடன் வாக்களிக்க விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து பொதுமக்கள் கையெழுத்து இயக்கத்தின் கீழ் கையொப்பமிட்டனர். இந்நிகழ்ச்சியில் உதவி ஆட்சியர் (பயிற்சி), திருமதி பா. ஜெயசுதா, திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, உதவித் திட்ட அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் மகளிர் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

வங்கியாளர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி

நாமக்கல் மாவட்ட தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், எருமப்பட்டி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலகத்தில், வங்கி மேலாளர்களுக்கான புத்தாக்கப் பயிற்சியானது 01.02.2021 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியினை நாமக்கல் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் மருத்துவர் இரா. மணி அவர்கள் துவக்கி வைத்து, சுய உதவி குழுக்களுக்கு குறித்த நேரத்தில், தக்க முறையில் வங்கி நேரடி கடன்கள் வழங்குவதில் வங்கி மேலாளர்களின் ஒத்துழைப்பு குறித்தும் மற்றும் முறையான கடன் திருப்பத்தை உறுதி செய்வதில், மாவட்ட ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் நடைமுறைகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. சதீஷ்குமார், உதவித் திட்ட அலுவலர் திருமதி உமா சுந்தரி, எருமப்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு. சரவணன், திரு. அறிவழகன், எருமப்பட்டி ஒன்றியத்தினை சார்ந்த தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மேலாளர்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் செயலாளர், வட்டார இயக்க மேலாளர், சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுனர், சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு பொறுப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் கருத்தரங்கம்

செங்கல்பட்டு மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், மாவட்ட அளவிலான மாவட்ட வங்கி ஒருங்கிணைப்பாளர்கள், வங்கி கிளை மேலாளர்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி செயலாளர்களுடனான மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு குறித்து திட்ட விளக்க கருத்தரங்கு செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ. ஜான் லூயிஸ், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் 11.02.2021 அன்று மறைமலைநகர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் செங்கல்பட்டு மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திரு. சீனிவாசராவ், மாவட்டமுன்னோடி வங்கி மேலாளர், உதவி திட்ட அலுவலர்கள், மாவட்ட வங்கி ஒருங்கிணைப்பாளர்கள், பல்வேறு வங்கிகளின் கிளை மேலாளர்கள், மகளிர் திட்ட வட்டார மேலாளர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள், சமுதாய அமைப்பாளர்கள், சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

2020-21 ஆம் நிதியாண்டில் செங்கல்பட்டு மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட ரூ. 634.00 கோடி இலக்கில் தற்போது வரை ரூ. 526.72 (83%) கோடி இலக்கு எய்தப்பட்டுள்ளது, மீதமுள்ள இலக்கை குறித்த காலத்தில் முடிக்க வேண்டுமென அனைத்து வங்கியாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது. இத்துடன் மகளிர் சுய உதவி குழுக்கள் வளர்ச்சியின் அவசியம், வங்கியாளர்கள் சுய உதவி குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பின் முக்கியத்துவம் மற்றும் வாழ்வாதார முன்னேற்றம் குறித்தும் Power Point Presentation மூலம் எடுத்துரைக்கப்பட்டது.

திட்ட இயக்குநர் அவர்களின் தலைமையில் மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் கருத்தரங்கம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், மாவட்ட அளவிலான மாவட்ட வங்கி ஒருங்கிணைப்பாளர்கள், வங்கி கிளை மேலாளர்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி செயலாளர்களுடனான மகளிர் சுய உதவி குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு குறித்து திட்ட விளக்க கருத்தரங்கு காஞ்சிபுரம் மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திரு. சீனிவாசராவ் அவர்களின் தலைமையில் 19.02.2021 அன்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர், முன்னோடி வங்கி மேலாளர், உதவித் திட்ட அலுவலர்கள், மாவட்ட வங்கி ஒருங்கிணைப்பாளர்கள், பல்வேறு வங்கிகளின் கிளை மேலாளர்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளின் செயலாளர்கள், மகளிர் திட்ட வட்டார மேலாளர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள், சமுதாய அமைப்பாளர்கள், சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் 2020-21 ஆம் நிதியாண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட ரூ.406 கோடி இலக்கில் தற்போது வரை ரூ.376.41 (93%) கோடி இலக்கு எய்தப்பட்டுள்ளது. மீதமுள்ள இலக்கை குறித்த காலத்தில் முடிக்க வேண்டுமென அனைத்து வங்கியாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது. அத்துடன் மகளிர் சுய உதவி குழுக்கள் வளர்ச்சியின் அவசியம், வங்கியாளர்கள் சுய உதவி குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பின் முக்கியத்துவம் மற்றும் வாழ்வாதார முன்னேற்றம் குறித்தும் Power Point Presentation மூலம் எடுத்துரைக்கப்பட்டது.



தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் தேர்தல் விழிப்புணர்வு பிரச்சாரம்

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2021ஐ முன்னிட்டு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 100 சதவிகித வாக்குப்பதிவின் அவசியம் குறித்தும், வாக்களிப்பதின் அவசியம் குறித்தும் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் சுய உதவி குழுவினர் உறுதி மொழி எடுத்துக் கொண்டதுடன், வாக்குப்பதிவு குறித்து வண்ணக் கோலங்கள் இடுதல், விழிப்புணர்வு பேரணி நடத்துதல் ஆகியவற்றை மேற்கொண்டனர். இந்நிகழ்வுகளில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், உயர் அலுவலர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், சுய உதவி குழுவினர் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

வாக்கு திருவண்ணாமலை மாவட்டம்

வாக்கு காஞ்சிபுரம் மாவட்டம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் தேர்தல் விழிப்புணர்வு பிரச்சாரம்

விழுப்புரம் மாவட்டம்

நாமக்கல் மாவட்டம்

கன்னியாகுமரி மாவட்டம்

தருமபுரி மாவட்டம்

அரியலூர் மாவட்டம்

தென்காசி மாவட்டம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் தேர்தல் விழிப்புணர்வு பிரச்சாரம்

இராமநாதபுரம் மாவட்டம்

திண்டுக்கல் மாவட்டம்

புதுக்கோட்டை மாவட்டம்

இடைக்கால ஆய்வுக் கூட்டம்! திட்டத்தில் முனைப்புடன் முன்னேற்றம்!

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்ட அலுவலகத்தில், பிப்ரவரி 15ஆம் தேதி முதல் 26ஆம் தேதி வரை உலக வங்கி இடைக்கால மதிப்பீடு நடைபெற்றது. இந்த 12 நாட்கள் கூட்டத் தொடரின் முதல் நாள் கூட்டத்தை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். இந்த இடைக்கால ஆய்வுக் கூட்டத்தில், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் முதன்மைச் செயல் அலுவலர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள், திட்டத்தின் மூத்த பணியாளர்கள், மாவட்ட செயல் அலுவலர்கள், இளம் வல்லுநர்கள் மற்றும் உலக வங்கியின் அலுவலர்கள் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் துவங்கப்பட்டது முதல், செயல்படுத்தப்பட்ட பல்வேறு முயற்சிகள் மற்றும் அதன் வெளிப்பாடுகளை அறிந்து கொள்ளவும், திட்டத்திற்காக முன்னெடுக்கப்பட்ட செயல்பாடுகளின் நிலைகளையும், தேவைகளையும் புரிந்து கொண்டு அவற்றுக்காக திட்டமிடவும், கடந்த மூன்று ஆண்டுகளாக நடைபெற்ற முன் முயற்சிகளை பற்றிய அனுபவ பகிர்வாகவும் இந்த ஆய்வு அமைந்தது. மேலும் மூன்று ஆண்டுகளில் செயல்பாட்டில் உள்ள தடைகள், சவால்கள் வரை திட்டத்தின் அனைத்து வழிகளும் வழிமுறைகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆராயப்பட்டது.

அடுத்து வரவிருக்கும் மூன்று ஆண்டுகளின் செயல்முறைகளுக்கான திட்டங்கள், சுற்றுச்சூழலில் பாதுகாப்பு அணுகுமுறை, பாதுகாத்தல், சமூக பாதுகாப்பு மற்றும் குறை தீர்க்கும் முறை திட்டம், தகவல் மேலாண்மை வழிமுறைகள், கண்காணித்து மதிப்பீடு செய்தல், திட்டம் வகுத்தல், திறன் பயிற்சி, தகவல் மேலாண்மைக்கு திட்டமிடுதல் மற்றும் இன்னும் பல சிறப்பம்சங்கள் குறித்து பகிர்ந்து கொள்ளப்பட்டது.

இந்த இடைக்கால மதிப்பீடு திட்டத்தின் தலைமை மற்றும் திட்டத்தில் நடைபெறும் செயல்பாடுகளுக்கு முக்கிய முடிவு எடுப்பவர்கள் குறித்தும் அறியப்பட்டது. குறிப்பாக, எந்தவொரு நிகழ்வுகளுக்கும் திருத்தம் மற்றும் முடிவு எடுத்தல் போன்றவையும் அறியப்பட்டன. திட்டத்தின் மீதமுள்ள காலங்களில் திட்டத்தின் செயல்பாடுகளுக்கு வழிமுறை வகுக்கப்பட்டதுடன் அதற்கான நிதி ஆதாரங்களும் ஆராயப்பட்டது.

செழிப்பான ஊரகம்! வளமான தமிழ்நாடு!

வேளாண் வளர்ச்சிக்கு சந்திப்பு! ஒருங்கிணைந்த முன்னெடுப்பு!

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டக் குழுவினர் டாக்டர். ஆ. ஜவஹர்லால், இயக்குநர், விரிவாக்கக் கல்வி, டாக்டர். ரவி தியோடர், HoD, டாக்டர். சிவக்குமார் இயக்குநர், வேளாண் தொழில் மேம்பாடு, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் ஆகியோரை பிப்ரவரி 5ஆம் தேதி சந்தித்தனர்.

இந்த சந்திப்பின் போது தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் இரண்டையும் இணைப்பது குறித்த நடைமுறை சாத்தியங்கள் பற்றிய கலந்துரையாடல் நடந்தது. இந்த சந்திப்பில் வேளாண் தொழில் மேம்பாட்டிற்கு நிதி மற்றும் ஆதரவு, பண்ணைப் பள்ளி, பயிற்றுநர்கள், சமுதாய வல்லுநர்கள் மற்றும் திட்டப் பணியாளர்கள் ஆகியோரின் திறன் மேம்பாடு குறித்தும் விவாதிக்கப்பட்டது.

சோதனை காலத்தில் ஆதரவு! சிறப்பு நிதியால் தலைநிமிர்வு! வெற்றிலை உற்பத்தியாளர் குழு, தூத்துக்குடி

கொரோனா காலத்தில், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் சிறப்பு நிதியால், தூத்துக்குடி வெற்றிலை உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரம் மீண்டு வந்தது. கொரோனா காலத்திற்கு முன்பாக தூத்துக்குடியில் உற்பத்தியாகும் வெற்றிலைக்கு கர்நாடகா, ஆந்திரபிரதேசம், உத்தரப்பிரதேசம், புதுதில்லி, மேற்கு வங்கம், ராஜஸ்தான் மற்றும் இன்னும் பல மாநிலங்களில் நல்ல வரவேற்பு இருக்கிறது.

கொரோனா ஊரடங்கு காலத்தில் மாநிலங்களுக்கு இடையே வாகனப் போக்குவரத்திற்கு தடை விதிக்கப்பட்டிருந்ததால், உற்பத்தி செய்த வெற்றிலைகளை விற்க முடியாமல், பெரும் சிரமத்திற்கு ஆளாகினர். இதில் ஆத்தூர் ஊராட்சி வெற்றிலை உற்பத்தியாளர் குழுவில் இருந்த 480 உறுப்பினர்களும் தொழில் தடை ஏற்பட்டு இன்னலுக்கு உள்ளானார்கள். இதனால், இவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டதுடன், அனைவரின் வெற்றிலை உற்பத்தியும் முற்றிலும் தடைபட்டது.

சொந்த ஊர்களில் வெற்றிலை வியாபாரத்தை தொடர்ந்தாலும், அதன் விற்பனையளவு குறைவாகவே இருந்தது. வழக்கம் போல பல லட்ச ரூபாய்களில் நடைபெறும் வணிகம் நடக்கவில்லை. குழுவில் உள்ள அனைவரும் செய்வது அறியாது திகைத்திருந்த பொழுது, தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட சிறப்பு நிதியுதவி, இவர்களுக்கு நம்பிக்கையை கொடுத்ததுடன், மீண்டும் வழக்கமான வணிகத்தை மீட்டெடுக்க மிகவும் உதவியாக இருந்தது.

வழங்கப்பட்ட நிதியை குழுவில் உள்ளவர்கள் அவரவர்களில் தொழில் அளவிற்கு ஏற்றவாறு பிரித்து எடுத்துக் கொண்டனர். இப்பொழுது இவர்களின் வாழ்வாதாரம் மேம்பட்டதுடன், கடந்த 2 மாதங்களாக இவர்களின் லாபமும் இரட்டிப்பாக உயர்ந்துள்ளது.

செழிப்பான ஊரகம்!
வளமான தமிழ்நாடு!

இயற்கை மருத்துவம், மக்களுக்கு சமர்ப்பணம்!

பாரம்பரிய மருத்துவம், இருளர் பழங்குடி பெண்கள் நல அமைப்பு

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டாரத்தில், 417 மகளிர் உறுப்பினர்களை கொண்ட, இருளர் பழங்குடி பெண்கள் நல அமைப்பு (ITWWS) இயங்கி வருகிறது. இருளர் பழங்குடி பெண்களின் உரிமைகளை காத்திடவும், வனங்களின் வளங்களை பாதுகாத்திடவும் இந்த அமைப்பு மக்கள் பங்கேற்புடன் 1986ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. வனப் பகுதிகளில் உள்ள மூலிகைகள் மற்றும் மருத்துவ தாவரங்களை சேகரித்து, அருகிலுள்ள வியாபாரிகளிடம் குறைந்த லாபத்தில் விற்பது இவர்களின் முக்கிய தொழிலாகும்.

கடந்த 20 ஆண்டுகளாக, இச்சமூக மக்கள் அப்பகுதியில் மூலிகை தாவரங்களை வளர்த்து, அதனை கொண்டு மக்களுக்கு இயற்கை மருத்துவத்தை வழங்கி வருகின்றனர். இந்த மூலிகைகளை அரைத்து மருந்தாக மாற்றுவதற்கு எந்திரங்கள் இல்லாததால், வெளியூரில் உள்ள வியாபாரிகளிடம் கொடுத்து அரைத்து வாங்கி வந்தார்கள்.

பழங்குடி மக்கள் மூலிகைகளை பயிரிடுவதற்கும் மற்றும் உற்பத்தி செய்வதற்கு மட்டுமே அறிந்திருந்தார்கள். மேலும் இவர்களுக்கு மூலிகை மருந்துகளை பாக்கெட் செய்யவும், பெயரிட்டு லேபிள் ஒட்டி சந்தைகளில் விற்பனை செய்யவும் போதிய விவரங்கள் இல்லாமையால், இதை சிறு குடிசைத் தொழிலாகவே செய்து வந்தார்கள்.

கடந்த ஆண்டு வந்த கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் இவர்களின் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டது. இவர்களின் விற்பனை சரிந்து பெரும் நஷ்டத்தில் இருந்தனர். இவர்களுக்கு தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் ரூ. 10 லட்சத்தை கோவிட்19 சிறப்பு நிதியாக வழங்கியது. இந்நிதியை கொண்டு, புதிய அரவை இயந்திரம், பாக்கெட் இடும் இயந்திரம், கண்ணாடி பாட்டில்கள் மற்றும் லேபிள்களை வாங்கினார்கள்.

தக்க தருணத்தில் நிதியுதவி அளிக்கப்பட்டதால் சங்கத்தின் உற்பத்தி இப்பொழுது 20% கூடுதலாக அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு உடனடியாக 450 கிலோ மூலிகை மருந்துகளை விற்றுள்ளனர். இந்த ஆண்டு 1,200 கிலோ முதல் 1,500 கிலோ வரை உற்பத்திச் செய்வதுடன் அதற்கான விற்பனையையும் எதிர்பார்த்துள்ளனர்.

விற்பனை அதிகரிப்பதின் மூலமாக அதற்கான மூலப்பொருட்களின் தேவையும் அதிகரித்துள்ளது. இதனால் மூலிகைகளை அதிகமாக பயிரிட வேண்டிய அவசியம் வந்துள்ளது. இதன் மூலம் சங்கத்தில் உள்ள 417 உறுப்பினர்களுக்கும் வேலைவாய்ப்புகள் அதிகரிப்பதுடன், குடும்பத்திற்கான பொருளாதார வளமும் உயர்ந்து இருக்கிறது. இவர்கள் கூடுதலாக சுகாதார நேப்கின்களும் உற்பத்தி செய்கின்றனர்.

செழிப்பான ஊரகம்!
வளமான தமிழ்நாடு!

ஏற்றுமதியில் புதிய பயணம்!
உற்பத்தியில் புதிய நம்பிக்கை!
ஆலி உற்பத்தி

திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் ஒன்றியம், பழவேற்காட்டில் உள்ள செஞ்சியம்மன் நகர் மீனவர் கூட்டுறவு சங்கம் 1990ல் இருந்து செயல்பட்டு வருகிறது. இக்குழுவில் 15 இருளர் சமுதாயத்தை சார்ந்தவர்கள் இணைந்து பழவேற்காடு ஏரியில் மீன்பிடித் தொழில் செய்து வருகின்றனர். பழவேற்காடு ஏரி ஒரு உப்பு நீர் ஏரியாகும்.

இந்த ஏரியில் பச்சை மற்றும் வெள்ளை வகை ஆலி (Bivalve) உற்பத்தி செய்து வருகின்றனர். இங்கு கிடைக்கும் ஆலி பெரும்பாலும் கேரளா மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. சுமார் 8 முதல் 9 மாதங்கள் வளர்க்கப்படும் ஆலியானது, 45 முதல் 50 கிராம் எடை வரை வளர்கிறது. இங்கு வளர்க்கப்படும் ஓடுகளுடன் கூடிய பச்சை ஆலி ஒரு கிலோ ரூ. 120/- முதல் ரூ. 150/- வரையிலும், ஓடு இல்லாமல் உள்ள ஆலிகள் ரூ. 500/- முதல் ரூ. 550/- வரையிலும் விற்கப்படுகின்றன.

கொரோனா ஊரடங்கின் காரணமாக இவர்களது தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டு, இவர்களின் வாழ்வாதாரத்தை இழந்து பெரும் சிரமத்திற்கு உள்ளானார்கள். மேலும் இத்தொழிலை திரும்ப துவங்கவும், அதற்கு தேவையான உபகரணங்கள் (ரேக், கயிறு, வலை மற்றும் கருவிகள்) வாங்க முடியாமல் தவித்து வந்தனர். இந்நிலையில் இவர்களுக்கு தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மூலம், கொரோனா சிறப்பு நிதியுதவி தொகுப்பில் ரூ.1.50 லட்சம் வழங்கப்பட்டது. இந்நிதியில் இவர்கள் தொழிலுக்கு தேவையான புதிய உபகரணங்கள் வாங்கியும், பழைய ரேக்கை சீரமைத்தும் தொழிலை புதிய உற்சாகத்துடன் செய்து வருகின்றனர்.

இதன் மூலம் இவர்கள் இழந்த வாழ்வாதாரம் மீட்கப்பட்டு அனைவரும் மகிழ்ச்சியுடன் இலாபகரமாக இத்தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டு தந்த தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்திற்கு நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

ஒரு சொல் கேளீர்...

நேர்மையின் சக்தி

சுய உதவிக் குழு சகோதரிகளுக்கு வணக்கம்.

இந்த மாதம் நாம் 'நேர்மை' குறித்து பேசலாம். உள்ளத்தில் ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும். பெண் சக்தியின் அடையாளமாக மாறிவிட்ட சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களாகிய நீங்கள்அதனை பெரும் சக்தியாக மாற்றிக் கொள்ள நேர்மை எனும் வலிமையை கைக்கொள்ள வேண்டும். அனைத்து செயல்பாடுகளிலும் நேர்மை ஆள்வதை உறுதி செய்ய வேண்டும். நேர்மை ஒரு பெண்ணை முழுமையான பெண்ணாக ஆக்கும்.

குழு செயல்பாட்டின் ஆதாரமே நேர்மை எனும் புள்ளியிலேயே தொடங்கப்பட வேண்டும். உறுப்பினர்களிடையே பணம் வசூலித்து கணக்கு வைத்துக்கொள்ளும் போதும் நிவர்த்தி கோரும் தேவைகளை நெறிபடுத்தும் போதும் நேர்மையான எண்ணத்தோடு செயல்பட வேண்டும். தன்னலத்தின் தாக்கம் தவிர்க்கப்பட்ட பொது நலத்துடன் கூடிய நேர்மையான முடிவுகள் அக்குழுவின் தொடர்ந்த வெற்றிக்கு ஆதாரமாக இருக்கும்.

வங்கிகளில் கடன் பெற்று பயன்படுத்திக் கொள்வது, பெற்ற கடனை தவறாமல் திருப்பி செலுத்துவது, எந்த நோக்கத்திற்காக கடன் வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்தை செயலாக்குவது என அனைத்து நிலைகளிலும் நேர்மையின் நெடும் பயணம் தொடர்ந்திருக்க வேண்டும்.

உற்பத்திப் பொருட்கள் தொடர்பான முடிவுகள் எடுக்கும் போதும் உற்பத்தி செய்த பொருள்களை சந்தைப்படுத்தும் போதும் நாணயம் கூடிய முடிவுகளே நன்மை பயக்கும். தயாரிப்பு பொருட்களை காட்சிப்படுத்தும் போது தன்னார்வமுடன் வாங்க வரும் பொதுமக்களிடம் நீங்கள் தயாரித்த பொருட்களின் உண்மைத்தன்மையை எடுத்துரைக்க வேண்டும். பொருட்களுக்கான ஆக்க விலையில் கூடுதலாக வைத்து விற்பது ஏற்புடையது தான். ஆனால் அதிலும் நேர்மையின் பரவல் நிச்சயம் இருக்க வேண்டும். ஒரு குழுவானது தான் உற்பத்தி செய்த பொருட்களை சந்தைப்படுத்துவதற்காக ஒரு சில குழு உறுப்பினர்களை நம்பி பொருட்காட்சிகளில் பங்கு கொள்ள வெளியிடங்களுக்கு அனுப்பி வைக்கும் போது அதில் வரும் லாபத்தை அனைவருக்கும் உரிய முறையில் நியாயமாகவும் நாணயமாகவும் பகிர்ந்தளிக்க வேண்டும்.

ஓர் உறுதி தந்தால் அந்த சொல்லில் நிற்பது, சக உறுப்பினரிடம் பணம் தருவதாகச் சொன்னால் அதனை உரிய நேரத்தில் உரிய வகையில் கொடுப்பது, வருவதாகச் சொன்ன நேரத்தில் சரியாகச் செல்வது போன்ற அனைத்து நிலைகளிலும் நேர்மையின் அண்மை நிகரில்லாதது.

ஒருவரிடம் கேட்ட செய்தியை மற்றவர்களிடம் பகிரும் பொழுது நேர்மையான மனதோடு அதனை உண்மை கலந்து சொல்ல வேண்டும். அதை விடுத்து தன்னுடைய சுயலாபத்துக்காக அல்லது பழிவாங்கும் நோக்கில் அதனை திரித்து சொல்வது, திருத்தி சொல்வது, கூடுதலாக சொல்வது, குறைத்து சொல்வது போன்ற செயல்கள் நேர்மையின் பாற்படாது. எனவே வாக்கு, எண்ணம், செயல், உடல் என அனைத்து நிலைகளிலும் நேர்மையைப் பின்பற்ற வேண்டும். குடும்ப வாழ்வில் கடைபிடிக்கும் சுய ஒழுக்கமும் நேர்மையின் பிறிதொரு பரிமாணமாகும். ஒருவருக்கு ஒருவர் உண்மையாக இருப்பது அறம் சார்ந்த இல்வாழ்வின் அற்புத நிலைப்பாடு. இதுவும் நேர்மையின் மிகப்பெரும் வெளிப்பாடு.

சுய உதவி குழுக்களின் பெண்களில் சிலருக்கு அலுவலக பொறுப்புகளும் கூடவே வருகிறது. பணி சார்ந்த பணத்தை கையாளும் போதும் அது குறித்த கணக்குகளை ஒப்படைக்கும் போதும் நேர்மையின் ஆதிக்கம் நிறைந்திருக்க வேண்டும். பொதுவான பணம் தனக்கானதல்ல என்பதான மன நிலை தெய்வ நிலைக்கு சமானம்.

நேர்மையையே தம் வாழ்வியலாகக் கொண்டால் நேர்கொண்ட பார்வையும் நிமிர்ந்த நன்னடையும் நானிலத்தில் யாருக்கும் அஞ்சா செருக்கும் தானாகவே இங்கே தமக்கு வந்து வாய்த்து விடும். நேர்மையைப் பழகுபவர்களே அதன் சுவையை நன்கறிவர். பெண்மையும் நேர்மையும் கைக்கோர்த்துக் கொண்டால் தலைமுறைக்கும் அதன் பலன்கள் தடையின்றி தொடரும்.

நேர்மை கொண்ட பெண்ணொருவர் மாவலிமை கொண்டவராம். நேர்மையே பழகிக்கொண்டு நித்தமும் நிகழ் வாழ்வில் தீரமிக்க பெண்களாய் திகழ்ந்தே மகிழ்ந்திடுவோம்.

பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
சென்னை.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

வங்கியாளர்களுக்கான ஒருங்கிணைப்பு கருத்தரங்கம்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் 19.02.2021 அன்று வங்கி கிளை மேலாளர்களுக்கு ஒரு நாள் ஒருங்கிணைப்பு கருத்தரங்கம் ஹோட்டல் பெமினாவில் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சு. சிவராசு, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் தீப ஒளி, ஏற்றம் செம்பருத்தி, ரோஜா, மகிழம்பூ, வெற்றி மற்றும் துளசி ஆகிய சுய உதவி குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு ரூ. 27,85,000/- மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது.

இக்கருத்தரங்கில் திருச்சிராப்பள்ளி மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் (பொ) திரு. ஆர். சங்கர், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. சத்தியநாராயணன், உதவித் திட்ட அலுவலர் திரு. ஆ.ஜான்பால் அந்தோணி, திரு. ரவீந்திரன், மாவட்ட தொழில் மைய மேலாளர், கூட்டுறவு சங்கதுணை இயக்குநர் மற்றும் வங்கியாளர்கள் கலந்து கொண்டனர்.



பெண்ணின் பெருமை

தென்றலை, மலரை, தண்ணொளி மதியை,
நின்றாடும் கொடியை, நீலவண்ணக் கடலை,
கொண்டாடும் பூமியுடன், விண்மீன்கள் தொகுப்பைப்
பெண்ணாகச் சொல்லிப் பெருமை செய்தது ஒருகாலம்...

மென்மையே பெண்மையாய், பொறுமையே தன்மையாய்
வன்முறைகள் வந்த போதும் எதிர்க்காது அமைதியாய்
துன்பங்கள் தாங்கவும், துயரங்கள் ஏற்கவும்
பழகியே வாழ்ந்தனர் பெண்களும் பலகாலம்...

பெண் பெரும் சக்தியென்று பெரிதும் பேசி வந்த
பெரியோரும், கவிஞர்களும் ஒன்றாய்க் கைகோர்த்து
பெண்ணுரிமை வளர்ந்தாலே மானுடம் வளருமென்று
மண் மீது வாழுகின்ற மக்களுக்குச் சொல்லிச் சொல்லி
மெல்ல மெல்லக் கொணர்ந்தார் மாற்றங்களை நாளும்...

கல்வியிலும், தொழில்களிலும், கருத்துமிக்கஅரங்கினிலும்
வலிய பெரும் செயல்களிலும், வாழும் பண்பாட்டினிலும்
பெருமளவு உரிமை தந்தார்; பெண் உயர வழியைத் தந்தார் - இன்று

பரிதாபப் பார்வைக்கும், அனுதாப உதவிக்கும்ஆளான
நிலையினைக் கடந்து விட்டாள் - பெண்
சரியான பார்வைக்கும், சமமான உரிமைக்கும்
நேர் நிற்கும் காலத்தை அடைந்து விட்டாள்...

சொல்லாலோ, செயலாலோ சிதைக்கப்பட்டாலும்-தன்னை
மனதாலும் திடத்தாலும் செதுக்கிக் கொண்டாள்...
கல்லாகக் கிடந்திடவே அடக்கப்பட்டாலும்
சிலையாக வளர்ந்து நிலைநிறுத்திக் கொண்டாள்...

நிமிர்ந்து நிற்கும் சக்தியென்றும் நிஜமான புயலென்றும்
வியந்து நிற்கும் உலகிற்கு உரைத்து விட்டாள்-அவள்
மருண்ட விழி மானோடும்; மயக்கம் தரும் தேனோடும்
கர்ஜிக்கும் சிங்கம் என்றும் காட்டி விட்டாள்...

அன்பில் உலகம் தழைக்க, அமைதியில் உலகம் வாழ,
இனிமையாய் உலகம் இயங்க, இதயமாய்ப் பெண்கள் இருப்பார்-இனி
பாலின பேதம்; பார்வையில் பேதம் தவிர்த்தோம் என்றால்
பலவிதத்தில் உலகம் வளரத் துணையாய் நிற்பார்...!

ஜா.சம்பத்,
கூடுதல் இயக்குனர் (திறன் வளர்ப்பு)
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

வாக்களிக்க மறவாதீர்...!

வாக்களித்து மக்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் முறை என்பது, சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்நாட்டில் சோழர்கள் ஆட்சி காலத்திலேயே குடவோலை முறை மூலம் தொடங்கி விட்டது. ஒரு தேர்தல் வெற்றிகரமாக நடந்திருக்கிறது என்றால், அத்தேர்தலில் 100 சதவீத வாக்குகள் பதிவாகி இருக்க வேண்டும்.

பதினெட்டு வயது நிறைவடைந்த எவரும் வாக்காளராக தன் பெயரை பதிவு செய்யலாம். உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளதா என்பதை கவனிக்க வேண்டியது அவசியம். வாக்காளர் பட்டியலில் பெயர் இருந்தால் மட்டுமே, வாக்களிக்கும் ஜனநாயக கடமையை நீங்கள் செய்ய முடியும்.

நம் சார்பில் நமக்கான நலத்திட்டங்களை செயல்படுத்த வேண்டியவர்களைத் தேர்ந்தெடுக்க போகும் நாள்தான் வாக்களிக்கும் நாள். ஆணுக்கு நிகராக பெண்களும் பெற்றிருக்கும் உரிமைகளில் முக்கியமானது வாக்குரிமை. பல நாடுகளில் பல்வேறு போராட்டங்களுக்குப் பிறகே பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்திருக்கிறது. ஆனால், இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு நடைபெற்ற முதல் தேர்தலிலேயே பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

ஒவ்வொரு வாக்காளரின் முதல் கடமை, வாக்காளர் பட்டியலில் தங்களின் பெயர் இருக்கிறதா என்பதை உறுதி செய்வதுதான். வாக்களிக்கும் ஆர்வமும், அக்கறையும் மட்டும் இருந்தால் போதாது. முறைப்படி வாக்காளர் அடையாள அட்டை பெற்று, நமக்கான வாக்கு உரிமையை நாம் பெற்றிருக்க வேண்டும். நமது பெயர் வாக்காளர் பட்டியலில் இருக்கிறதா, இல்லையா என்பதை நாம் இணையதளம் மூலமே தெரிந்து கொள்ளலாம். வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லை என்றால், இப்போதும் தாமதமாகி விடவில்லை. உடனடியாக வாக்காளர் பட்டியலில் பெயரை சேருங்கள்.

வாக்காளர் பட்டியலில் தொடர் திருத்தம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. வாக்காளர் பட்டியலில் நமது பெயரைச் சேர்ப்பது அவசியம். காரணம், நம் ஒவ்வொருவரின் வாக்கும் அந்த அளவுக்கு வலிமை வாய்ந்தது. 'வாக்களிப்பது புனிதமான கடமை' என்கிறார் நமது முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம். 1920லேயே 'யங் இந்தியா' புத்தகத்தில் வாக்களிக்கும் அவசியம் குறித்து மகாத்மா காந்தி வலியுறுத்தி இருக்கிறார். ஐந்து வருட அரசியலை தீர்மானிக்கும் சக்தியை நமது விரல் நுனிக்குக் கொடுத்திருக்கிறது ஜனநாயகம். 'என்னை யார் ஆள வேண்டும் என்பதை நானே தீர்மானிப்பேன்' என்கிற உறுதிமொழியை ஒவ்வொரு வாக்காளரும் தங்களது தீர்க்கமான தீர்மானம் ஆக்கிகொள்ள வேண்டும்.

வாக்களிப்பது நம் கடமையா? என்று கேட்டால் நிச்சயமாக, வாக்களிப்பது நம் கடமை மட்டுமல்ல உரிமையும் கூட. வாக்களித்தல் என்பது நம் பாரதம் நமக்கு அளித்த உரிமை . அதை முறையாக பயன்படுத்துவது நம் தலையாய கடமை .

'தண்ணீர் விட்டா வளர்த்தோம் கண்ணீரால் காத்தோம்' என்ற பாரதியாரின் வரிகள் குறிப்பது எதை? பல உயிர்களை பலி கொடுத்தல்லவா இந்த சுதந்திரத்தை பெற்றோம். பலர் வாழ்வு சிறையில் சிதைந்தது இன்று நாம்

அனுபவிக்கும் சுதந்திரத்திற்காகத் தானே. யாரோ ஒரு அந்நியனுக்கு அடிமையாயிருப்பதை விட நான் விரும்பும் ஒரு நபர் என் நாட்டை ஆள வேண்டும் என்பதற்காக பெற்றது தானே சுதந்திரம்.

ஏழையோ, படிக்காதவர்களோ, மாற்றுத்திறனாளிகளோ, பெண்களோ யாராய் இருந்தாலும் பரவாயில்லை, உங்களுக்கு 18 வயது நிரம்பி இருக்கிறதா? உங்கள் நாட்டின் தலையெழுத்தை நிர்ணயிக்கும் உரிமை உங்கள் கையில். நமக்கு அடிப்படை உரிமைகளை வழங்கும் ஜனநாயகத்திற்கு வலு சேர்க்க கட்டாயம் வாக்களிக்க வேண்டும். ஓட்டுகளின் விழுக்காடு ஜனநாயகத்தின் வலிமையை எடுத்துக்காட்டும் கண்ணாடி.

வாக்கை செலுத்தும் முன் கீழ்கண்ட உறுதி

மொழியை எடுத்துக்கொள்ளுங்கள்.

- என் வாக்கு உயிருக்கு சமமானது. விலை மதிப்பீடு செய்ய முடியாதது.
- என் வாக்கு என்னை ஆள்பவரை தேர்ந்தெடுக்கிறது.
- என் வாக்கு ஐந்தாண்டு ஆட்சிக்கான அதிகாரம்.
- வாக்களிக்க பணம் வாங்குவது தண்டனைக்குரிய குற்றம் என்பது எனக்கு தெரியும்
- என் வாக்கு என் உரிமை, கடமை, பெருமை
- என் மனசாட்சிப்படியே நான் வாக்களிப்பேன்.
- ஜாதி ரீதியாகவோ, மத ரீதியாகவோ உந்தப்பட்டு நான் வாக்களிக்க மாட்டேன்.
- நான் வாக்களிப்பது மட்டுமின்றி என் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரும் தங்கள் வாக்குரிமையை செலுத்திவிட்டனரா என்று உறுதி செய்து கொள்வேன்.

வாக்காளர் என்பது பெருமைக்குரிய விஷயமல்லவா. நான் இந்த நாட்டின் பிரஜை என்று சொல்லிக் கொள்வதில் சந்தோஷம் இல்லையா? எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்பது குறிப்பதும் இந்த தார்மீக உரிமையைத்தானே. நியாயமான முறையில் தங்களின் வாக்குகளைச் செலுத்துங்கள்.



PRESS & REGISTRATION OF BOOKS ACT 1867

Registration of News papers (Control) Rules 1956

FORM IV (SEE RULE 8) Statement about ownership Particulars of TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM

1. Place of Publication : **MUTRAM SOCIETY**
Tamil Nadu Corporation for Development of Women Ltd,
Annai Teresa Mahalir Valagam,
Valluvarkottam High Road,
Nungambakkam, Chennai – 600 034

2. Periodicity of its publication : **Monthly**

3. Printer's Name : **V. RAMESH**
Nationality : Indian
Full Address : **CHENNAI MICRO PRINT PRIVATE LTD**,
New 130 Old no.34, Nelson Manickam Road,
Aminjikarai, Chennai - 600 029.

4. Publisher's Name : **S.CHINNAPPAN**
Nationality : Indian
Full Address : Tamil Nadu Corporation for Development of Women Ltd,
Annai Teresa Mahalir Valagam,
Valluvarkottam High Road,
Nungambakkam, Chennai – 600 034

5. Editor's Name : **S.CHINNAPPAN**
Nationality : Indian
Full Address : Tamil Nadu Corporation for Development of Women Ltd,
Annai Teresa Mahalir Valagam,
Valluvarkottam High Road,
Nungambakkam, Chennai – 600 034

6. Owner's Name : **MUTRAM SOCIETY**
Represented by its Secretary
S.CHINNAPPAN.

I, S.CHINNAPPAN, hereby that the particulars given adove are true to the best of my knowledge.

Chennai : 600 034.
Date : 26–02–2021.

(S.CHINNAPPAN)
Signature Publisher

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
Empowering Lives

சென்னை, பெரும்பாக்கம் மறுகுடியர்த்தப்பட்ட அடுக்கு மாடி குடியிருப்பில் செயல்படும் சுய உதவி குழுக்கள் மற்றும் தெருவோர வியாபாரிகளுக்கு கடன் தொகை ரூ. 52 இலட்சம் விடுவிப்பு

சென்னை, பெரும்பாக்கத்தில் இருக்கும் மறு குடியமர்த்தப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பில் செயல்படும் 33 சுய உதவி குழுக்களுக்கு ரூ. 49 இலட்சமும், பிரதம மந்திரி தெருவோர வியாபாரிகள் ஆத்ம நிர்பார் நிதியின் மூலம் 30 நபர்களுக்கு தலா ரூ. 10 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ. 3 இலட்சம் கடன் தொகையும் வழங்கும் நிகழ்ச்சி 25.02.2021 அன்று நடைபெற்றது.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் ICICI வங்கி ஆகியவற்றின் மூலம் விடுவிக்கப்பட்ட இக்கடனுதவியை பெற்ற சுய உதவி குழுக்களின் உறுப்பினர்கள், இந்த தொகையை மூலதனமாகக் கொண்டு தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு சிறு தொழில்களை மேற்கொள்ள இருப்பதாகவும், அதன் மூலம் தங்களின் வருவாய் அதிகரிக்கும் என்றும் தெரிவித்தனர். மேலும் கொரோனாவால் பாதிக்கப்பட்ட தெருவோர வியாபாரிகள் தங்களின் வியாபாரத்தை மீண்டும் தொடர்ந்திட நடைமுறை செலவினத்திற்கு இக்கடனுதவி பெரிதும் உதவியாய் இருக்கும் என்றும் தெரிவித்தனர்.

இக்கடனுதவி வழங்கும் நிகழ்ச்சியில் இணை இயக்குநர் (மாநில அலுவலகம்) திருமதி. எஸ். பாரிஜாதம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் / சென்னை மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் (கூடுதல் பொறுப்பு) திருமதி. பெ. விஜயலட்சுமி, மாநில வல்லுநர்கள் திரு. மூர்த்தி, திரு. மணிராஜ், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மேலாளர் திரு. சுசி, ICICI வங்கியின் மண்டல மேலாளர் திரு. யோகேஷ், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர் திரு. பாஸ்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு

விருதுநகர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இரா. கண்ணன், இ,ஆ,ப., அவர்கள் நேரடியாக ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் முதற்கட்டமாக PM-SVANidhi திட்டத்தின் கீழ் விருதுநகர் நகராட்சியில் பயனடைந்த தெருவோர வியாபாரிகளை நேரில் சந்தித்து, அவர்களின் வாழ்வாதாரம் குறித்து கேட்டறிந்தார்.

அதனை தொடர்ந்து சாய்ராம் இன்ஸ்ட்டியூட்டினை பார்வையிட்டு, அந்நிறுவனத்தின் செயல்பாடுகளையும், இவர்களின் மூலம் இந்திய மற்றும் தமிழக அரசின் திறன் வேலைவாய்ப்பை உருவாக்குதல் பயிற்சி (ESTP) மற்றும் இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்றவர்களில் வேலைவாய்ப்பு அடைந்தவர்களின் விவரங்களை கேட்டறிந்தார்.

சாத்தூர் நகராட்சியில் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம் (DSMS) மூலம் புதிதாக அமைக்கப்பட்ட தையல் அலகை மாவட்ட ஆட்சித் தலைவர் துவங்கி வைத்தார். பின்னர் சாத்தூர் நகராட்சியில் தெருவோர வியாபாரிகளுக்கு PM-SVANidhi கடன் காசோலைகளை வழங்கி அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு உரிய வழியில் பயன்படுத்தும்படி கேட்டுக் கொண்டார்.

ஈரோடு மாவட்டம்

வாழ்வில் முன்னேற்றம் தந்த நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

ஈரோடு மாவட்டம், லக்கம்பட்டி பேரூராட்சியில் வசித்து வரும் எனது பெயர் மைதிலி. ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்த நான் ஏதாவது சுய தொழில் செய்து முன்னேற வேண்டும் என விரும்பி வீட்டிலேயே பூக்கள் வாங்கி கட்டி விற்பனை செய்து வந்தேன். போதிய வருமானம் கிடைக்கவில்லை. எங்கள் பகுதியில் தமிழ்நாடு மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் அமைக்கப்பட்ட ஸ்ரீ பாலமுருகன் மகளிர் சுய உதவி குழுவில் ஊக்குநராக இருந்து குழுவினை சிறப்பாக நடத்தி வந்தேன். இந்நிலையில் தமிழ்நாடு மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சமுதாய அமைப்பாளர் அவர்கள் தெருவோர வியாபாரிகளுக்கான கடன் திட்டத்தின் மூலம் எனக்கு ரூ. 10,000/- வங்கிக் கடன் பெற்றுத் தந்தார். இந்த தொகையை மூலதனமாக வைத்து மெயின் ரோட்டில் கடை ஒன்று வாடகைக்கு எடுத்தேன். தேவையான பொருட்கள் வாங்கி பூக்களை கட்டி விற்பனை செய்வதுடன், பூ மாலைகளும் கட்டி விற்பனை செய்து வருகிறேன். இப்போது எனது கடையில் 2 ஆட்கள் வேலை செய்கின்றனர். தற்போது மாதம் ஒன்றுக்கு எனக்கு ரூ.12000/க்கு மேல் வருவாய் கிடைக்கிறது. இந்த தொகையை கொண்டு எனது குடும்பத்தையும் வறுமையின்றி நடத்தி வருகின்றேன்.

நான் சுய தொழில் செய்யவும், எனது வாழ்வாதாரத்தை முன்னேற்றவும் வழி ஏற்படுத்தி கொடுத்த தமிழ்நாடு மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கும், மகளிர் மேம்பாட்டு இயக்கத்திற்கும் எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டம்

ஸ்ரீ காஞ்சி காமாட்சி மகளிர் சுய உதவி குழுவின் வெற்றிக் கதை

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் நகராட்சியில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் 12 பெண்கள் ஒன்று சேர்ந்து தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலமாக எங்களது ஸ்ரீ காஞ்சி காமாட்சி மகளிர் சுய உதவி குழு துவங்கப்பட்டது. காஞ்சிபுரம் மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்க இயக்குனரின் வழிகாட்டுதலின்படி, காஞ்சிபுரம் நகராட்சியில் காஞ்சி காமாட்சி என்ற பெயரில் சிண்டிகேட் வங்கி, காஞ்சிபுரம் கிளையில் சேமிப்பு கணக்கு துவங்கி, நல்ல முறையில் வரவு செலவு செய்து இக்குழுவை நடத்தி வருகிறோம்.

இக்குழுவின் உறுப்பினர்களாக உள்ள 5 பெண்களும் ஒன்றிணைந்து காகித கூழ் மற்றும் களிமண் பொம்மைகள் தயாரிக்கும் தொழிலை மேற்கொள்ள முடிவெடுத்து, அதற்கான மூலதனத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் SEP-G திட்டத்தின் மூலம் ரூ.1,20,000/ வங்கி கடன் பெற்று, இந்தத் தொகையைக் கொண்டு மூலப்பொருட்களை வாங்கி பொம்மை உற்பத்தி செய்ய தொடங்கினர். தாங்கள் தயாரித்த பொம்மைகளை மகளிர் திட்டம் மூலம் சென்னை மற்றும் காஞ்சிபுரத்தில் விற்பனை செய்து வருகின்றனர்.

துவக்கத்தில் 5 நபர்களைக் கொண்டு தொழில் தொடங்கிய இவர்கள் தற்போது இரண்டாவது வங்கி கடனாக ரூ.3,00,000/- பெற்று 9 நபர்களை கொண்டு வேலை செய்து வருகின்றனர். தற்போது இக்குழுவின் உறுப்பினர்கள் மாதந்தோறும் ரூ.60,000/- வரை வருமானம் ஈட்டி வருகின்றனர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

கைத்தறி மிதியடிகள் தயாரிப்பில் வாழ்வாதாரம் பெற்ற சுய உதவி குழு

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ.அபிஷேகபுரம் கோட்டம், உறையூர் பகுதியில் 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் பட்டியல் இனத்தைச் சேர்ந்த 14 நபர்களைக் கொண்டு துவக்கப்பட்ட செண்பகப்பூ மகளிர் சுய உதவி குழுவானது, தற்போது வரை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட திட்டத்தின் மூலம் சுழல் நிதி மற்றும் வங்கி நேரடிக் கடன் 3 முறை பெற்று அதற்கான வட்டி மானியமும் பெற்று வாழ்வாதார முன்னேற்றத்திற்கு பெரும் அடிக்கல் நாட்டியுள்ளது. இக்குழுவின் உறுப்பினரான ஆர். சம்பூர்ணம் (க/பெ. ரெங்கராஜ்) என்பவர் தனது குழு பற்றி கூறும்போது, நான் இக்குழுவின் மூலமாக கைத்தறி மிதியடி தயாரிப்பு குறித்து 3 நாட்கள் பயிற்சி பெற்றேன். தற்போது 2 வருடமாக சொந்தமாக எனது குழு மூலம் 3வது முறை வாங்கிய வங்கிக் கடனில் ரூ. 35,000/ பெற்று கைத்தறி மிதியடி தயாரிப்பு இயந்திரம் வாங்கி சுய தொழில் தொடங்கி இன்னாள் வரை சிறப்பாக செயல்பட்டு வருகிறேன்.

கொரோனா காலக்கட்டத்தில், அலுவலகங்களுக்கும், மருத்துவமனைகளுக்கும் மிதியடி தயார் செய்து கொடுத்து, வருவாய் பெற்றேன். இத்தொழில் மூலம் மாதந்தோறும் எனக்கு ரூ. 6,000/ வரை வருவாய் கிடைக்கிறது. இந்த வருமானம் எனது குடும்பத்தின் வளர்ச்சிக்கு மிகப்பெரும் உதவியாக இருக்கிறது. மேலும் கைத்தறி மிதியடி தயாரிப்பு குறித்த பயிற்சியினை எனது குழுவில் உள்ள மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுக்கிறேன்.

நான் தயாரிக்கும் மிதியடிகளை நிறுவனங்கள், மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், விடுதிகள், அனைத்து சுய உதவி குழுக்கள் மற்றம் மகளிர் கூட்டங்களிலும் விற்பனை செய்து வருகிறேன். எங்கள் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து இன்னும் 2 இயந்திரம் வாங்கி அதிக அளவில் மிதியடிகள் தயாரித்து பெரிய அளவில் எங்களின் தொழிலை வளர்ச்சியடைய செய்ய முயற்சிகள் எடுத்து வருகிறோம்.

எனது வளர்ச்சிக்கும், குழுவின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்களுக்கும், எங்களுக்கு நிதியுதவி அளித்த திருச்சி இந்தியன் வங்கி மைக்ரோசெட் கிளை அலுவலர்களுக்கும் எங்களது செண்பகப்பூ மகளிர் சுய உதவி குழுவின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்' என்று குறிப்பிட்டார்.

விழுப்புரம் நகராட்சி

மெழுகுவர்த்தி தயாரிப்புத் தொழில் மூலம் வளம் பெற்ற மல்லிகை மகளிர் மன்றம்

விழுப்புரம் நகராட்சி, சேவியர் தெருவில் செயல்பட்டு வரும் மல்லிகை மகளிர் மன்றம் குறித்து அதன் உறுப்பினரான சித்ரா என்பவர் கூறும் போது, எங்கள் மல்லிகை மகளிர் மன்றம் கடந்த 5 வருடங்களாக செயல்பட்டு வருகிறது. இந்த குழுவில் உறுப்பினர்களாக உள்ள 15 பெண்களும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்கள். தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் தொழில் முனைவோர் பயிற்சி, தொழில் பயிற்சி போன்றவை எங்களுக்கு வழங்கப்பட்டது. இப்பயிற்சிகளுக்குப் பிறகு எங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக எங்களின் குழுவில் உள்ள 5 உறுப்பினர்களை கொண்டு கூட்டுத் தொழில் செய்யலாம் என முடிவெடுத்து, மெழுகுவர்த்தி தயாரிக்கும் தொழிலை மேற்கொள்ள முடிவெடுத்தோம்.

எங்கள் குழுவின் சார்பில் வங்கிக் கணக்கு வைத்துள்ள இந்தியன் வங்கி மைக்ரோசாட் கிளையில் குழு கடனாக ரூ. 8 லட்சம் பெற்றும், அந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு, மெழுகுவர்த்தி தயாரிக்கும் அச்சு இயந்திரங்கள், மூலப்பொருட்கள் போன்றவற்றை கொள்முதல் செய்து, பல்வேறு விதமான அளவுகளின் மெழுகுவர்த்திகள் தயாரித்து சிறிய கடைகள் முதல் பெரிய கடைகள் வரை விற்பனை செய்து வருகின்றோம். தற்போது ஒவ்வொருவரும் நாள் ஒன்றுக்கு ரூ. 300/- வரை வருவாய் பெற்று வருகின்றோம். எங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வழி ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வதார இயக்கத்திற்கு எங்கள் மல்லிகை மகளிர் மன்றத்தின் உறுப்பினர்கள் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்' என்று குறிப்பிட்டார்.

நாகப்பட்டினம் மாவட்டம்

கீரைக்கொல்லை பகுதி அளவிலான குழு கூட்டமைப்பு

நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் நகராட்சியில் செயல்பட்டு வரும் கீரைக்கொல்லை பகுதி அளவிலான கூட்டமைப்பின் வெற்றிகரமான செயல்பாடு குறித்து அந்தக் குழுவின் உறுப்பினர்கள் கூறும்போது, நாங்கள் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலமாக பத்து குழுக்களை இணைத்து கீரைக்கொல்லை பகுதி அளவிலான குழு கூட்டமைப்பினை உருவாக்கி, பதிவு செய்துள்ளோம். கடந்த இரண்டு ஆண்டுகளாக வெற்றிகரமாக இப்பகுதி அளவிலான கூட்டமைப்பை நல்ல முறையில் செயல்படுத்தி வருகின்றோம். இக்கூட்டமைப்பிற்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலமாக ஆதார நிதி ரூ.50,000/- பெற்று, அதன் மூலமாக மீன்பிடி வலை பின்னும் தொழிலை செவ்வனே செய்து வருகின்றோம்.

மேலும் இந்தக் கூட்டமைப்பில் உறுப்பினர்களாக இருக்கும் அனைத்து சுய உதவி குழுக்களும் பல ஆண்டுகளாக மீன் பிடி வலை பின்னும் தொழிலை செய்து வருகின்றனர். இந்த வலைக்கு மடக்கு வலை என்று பெயர். இக்கூட்டமைப்பில் உள்ள 30க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் ஒன்றாக இணைந்து இந்த தொழிலை செய்து வருகின்றோம். ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு இரண்டு வலைகள் பின்ன கூலியாக ரூ.400/- பெற்று வருகின்றோம். தற்போது வங்கி பெருங்கடனுக்கு முயற்சி மேற்கொண்டுள்ளோம். அதன் மூலம் பெரிய அளவில் வலை பின்னும் தொழிலை செய்ய திட்டமிட்டுள்ளோம்.

கடந்த 25.02.2021 அன்று மாநில அலுவலகத்திலிருந்து வருகை தந்த திரு. எஸ். நித்தியானந்தம் (Thematic Specialist) அவர்கள் எங்கள் குழு கூட்டமைப்பை ஆய்வு செய்தபோது, நாங்கள் சிறப்பான முறையில் தொழில் செய்து வருகிறோம் என்று எங்கள் கூட்டமைப்பிற்கு பாராட்டுகளை தெரிவித்தார்.

இந்த தொழில் செய்வதற்கு எங்களுக்கு ஊக்கம் அளித்த உதவித் திட்ட அலுவலர் (NULM), சமுதாய அமைப்பாளர்கள், வங்கி மேலாளர்கள் மற்றும் நாகப்பட்டினம் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் அலுவலர்களுக்கும் எங்களது கூட்டமைப்பு சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்' என்று குறிப்பிட்டனர்.

முற்றக் கச்சேரி

அன்புள்ள முற்றம் வாசகர்களே

சுய உதவி குழுவின் ஊக்குனர் மற்றும் உறுப்பினர்களிடையே நடைபெறும் உரையாடல்கள் மற்றும் கேள்வி பதில்கள் வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்த விபரங்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் முற்றக் கச்சேரி வெளியிடப்படுகிறது. இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறோம். இனி முற்றக் கச்சேரிக்குள் போவோமா...

சுய உதவி குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்யும் முறை குறித்து சுய உதவி குழுவின் ஊக்குனர் மதி, உறுப்பினர்களான கமலா மற்றும் ராணி உரையாடிக் கொண்டதைப் பற்றியது இந்தப் பகுதி.

சுய உதவி குழுவின் அலுவலகத்தில் ஊக்குனர் மதி அமர்ந்திருக்கிறார். அங்கு குழுவின் உறுப்பினர்களான கமலா மற்றும் ராணி ஆகியோர் வருகின்றனர்.

இடம் : சுய உதவி குழு அலுவலகம்

மதி : வா... கமலா... வா... ராணி... எப்படி இருக்கீங்க?

கமலா : நல்லா இருக்கோம் அக்கா... எங்கள உடனே வரச் சொன்னீங்களாமே? என்ன விஷயம் அக்கா?

ராணி : ஏன் கமலா அவசரப்படுற... எந்த விஷயமா இருந்தாலும் அது நமக்கு நல்ல விஷயமாகத்தான் இருக்கும். அதை சொல்லத்தானே அக்கா நம்மல வரச் சொல்லி இருக்காங்க...

மதி : சரியா சொன்ன ராணி... நம்ம முன்னேற்றத்துக்கான விஷயம்தான்... நம்ம குழுவுல இருக்கறவங்க தயாரிக்கிற பொருட்களை விற்பனை செய்வதற்காக நம்ம மகளிர் திட்டம் மூலமாக நல்ல திட்டங்கள செயல்படுத்தி வராங்க. அது குறித்த கூட்டத்துக்குத்தான் நான் போயிட்டு வந்தேன்.

கமலா : என்ன திட்டம் அக்கா... சீக்கிரம் சொல்லுங்க அக்கா..

ராணி : ஏன் கமலா அவசரப்படுத்துற... அக்கா சொல்லுவாங்க...

மதி : நம்ம மகளிர் சுய உதவி குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்காக நம்ம மகளிர் திட்டம் மூலம் விற்பனைக் கண்காட்சிகள், கல்லூரிச் சந்தைகள், சாரஸ் கண்காட்சிகள் போன்றவையெல்லாம் நடத்துவது உங்களுக்குத் தெரியும் தானே?

கமலா : ஓ... நல்லா தெரியுமே... போன முறை கூட சென்னை அன்னை தெரசா மகளிர் வளாகத்துல நடந்த கண்காட்சியில நம்ம குழு தயாரிக்கிற பொருட்கள விற்பனை செஞ்சோமே... அதுதானே அக்கா...

ராணி : கமலா சொல்வது சரிதானே அக்கா?

மதி : அதுதான்... அதுமட்டுமில்லாம நாம தயாரிக்கிற பொருட்கள மதி அங்காடிகள் (Kiosk), பூமாலை வணிக வளாகங்கள் போன்றவற்றின் மூலமாகவும் விற்பனை செய்ய வழி செஞ்சிருக்காங்க.

ராணி : ஆமா அக்கா... நான் கூட போனவாரம் ஆட்சித் தலைவர் அலுவலகத்துக்கு போன போது அங்க இருக்கிற மதி அங்காடியில பொருட்கள வாங்கினேன்.

கமலா : நீங்க சொல்லறது எல்லாம் சரி அக்கா... ஆனா கண்காட்சிங்க வருசத்துக்கு மூணு முறைதான் தான் நடத்துவாங்க. பூமாலை வளாகத்துல இருக்கிற கடையிலயும், மதி அங்காடியிலயும் சில குழுக்களோட பொருட்களத்தானே விற்க முடியும். எல்லா சுய உதவிக்குழுக்களோட தயாரிப்பு பொருட்களையும் எப்படி விற்க முடியும்?

ராணி : கமலாவோட சந்தேகம் தான் எனக்கும் இருக்கு... எப்படி அக்கா எல்லா குழுக்களோட பொருட்களையும் விற்பனை செய்ய முடியும்?

மதி : நீங்க சொல்றது சரிதான். தமிழ்நாட்டுல செயல்படும் அனைத்து சுய உதவி குழுக்களும் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்யும் வகையில அற்புதமான திட்டத்தை நம்ம மகளிர் திட்டம் செயல்படுத்த போகுது... அது விஷயமாகத்தான் நேத்து கூட்டம் நடந்தது.

கமலா : அப்படியா...? என்ன திட்டம் அக்கா...

ராணி : எப்படி எல்லா சுய உதவி குழுக்களோட தயாரிப்புப் பொருட்களையும் விற்பனை செய்ய முடியும்?

மதி : சுய உதவி குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை இணைய வழியிலும், மதி அங்காடிகள் மூலமாகவும் விற்பனை செய்யும் வகையில நடவடிக்கை எடுத்து வராங்க.

ராணி : இணைய வழியிலா? மதி அங்காடியிலா? அது எப்படி?

கமலா : அதானே அந்த வழியில எப்படி நம்ம பொருள விற்க முடியும்?

மதி : ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கும் மகளிர் திட்ட அலுவலகத்தில் உள்ள மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தை அணுகி நம்ம சுய உதவி குழுக்கள் தயாரிக்கிற பொருட்களோட விபரங்களை அங்க இருக்கும் அலுவலர்களிடம் சொல்லனும்...

ராணி : அப்படி சொன்னா?

மதி : பொறு ராணி... நான் எல்லாத்தையும் விளக்கமா சொல்றேன். நாம தயாரிக்கிற பொருட்களோ விபரத்தை சொன்னா அந்த பொருட்கள மதி அங்காடியிலே விற்பனை செய்ய நடவடிக்கை எடுப்பாங்க. அதன் மூலமா நம்ம பொருட்கள விற்பனை செய்ய முடியும்.

கமலா : ஏதோ ஒரு வழியில விற்கலாமுன்னு சொன்னீங்களே அக்கா... அது என்ன வழி?

மதி : ஏதோ ஒரு வழியில்ல கமலா... இணையவழியில விற்கலாம்.

ராணி : அது எப்படி அக்கா அதையும் சொல்லுங்களேன்.

மதி : அதாவது இன்னைக்கு இணையவழியில பொருட்களை விற்பது அதிகரிச்சுட்டு வருது. அதனால நம்ம சுய உதவி குழுக்கள் தயாரிக்கும் பொருட்களையும் இணையவழியில் விற்பனை செய்யலாம் என தீர்மானித்து, நம்ம மகளிர் திட்டம் மூலமாக இணையவழியில் பொருட்களை விற்பனை செய்யும் அமேசான் (Amazon) என்ற நிறுவனத்துடன் இணைந்து சுய உதவி குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருது. சீக்கிரம் நீங்க தயாரிச்ச பொருட்களும் இணையத்துலயே விற்பனை செய்ய முடியும்.

கமலா : இந்த ஒரு வழி ரொம்ப நல்லா இருக்கே...

ராணி : இணையவழின்னு சொல்லு கமலா...

மதி : நீங்க தயாரிக்கிற பொருட்கள் குறித்து மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை அலுவலகத்தை தொடர்பு கொள்வதில் உங்களுக்கு சிரமம் இருந்தால் மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தை 044-28171705 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு கூட நீங்க தயாரிக்கிற பொருட்களோட விபரத்தை சொல்லலாம்.அல்லது tnstatesms@gmail.com என்ற மின்னஞ்சல் வாயிலாகவும் தொடர்பு கொள்ளலாம்.

கமலா : நம்ம முன்னேற்றத்துக்கு மகளிர் திட்டம் நல்ல திட்டங்களைத்தான் செயல்படுத்தி வருதுதானே அக்கா.

ராணி : சரியா சொன்ன கமலா... மகளிர் திட்டம் நம்ம நலம் நாடும் திட்டந்தானே அக்கா...

மதி : நீங்க இரண்டு பேர் சொன்னதும் சரிதான்.

(முற்றக் கச்சேரி தொடரும்)

வெளிச்சம்...!

மனம்விட்டுப் பேசுங்கள் மலரும் வாழ்க்கை;
மாசற்று வாழுங்கள் மணக்கும் வாழ்க்கை;
இனபேதம் ஒழியுங்கள் இன்னல் மாயும்;
இனிமையுடன் பழகுங்கள் இன்பம் கூடும்;
தனக்கென்று சேருங்கள் புகழை மட்டும்;
தர்மத்தை செய்யுங்கள் எல்லாம் கிட்டும்;
சினம் தணிந்து போற்றுங்கள் சிறந்து வாழ்வீர்...!
சேவை மனம் கொள்ளுங்கள் மகிழ்ந்து வாழ்வீர்...!!

உலகிருக்கும் வரையிலுங்கள் புகழிருக்க
உயர்ந்தோராய் வாழுங்கள் ஊரே மெச்சும்;
கலந்து மனம் ஒன்றிணைந்து உறவு கொண்டு
கனித்தமிழைப் பாடுங்கள் களிப்புப் பொங்கும்;
நலமோடு அனைவருமே வாழ்வதற்கு
நானென்றஅகந்தைதனை விட்டு விட்டால்
பலமுள்ள சமுதாயம் ஓங்கி நிற்கும்...!
பாரெல்லாம் அதுகண்டு பெருமை கொள்ளும்...!!

தேடுவதும் ஓடுவதும் வீண் அலைச்சல்;
தம்வாழ்வில் மனநிறைவே நல்விளைச்சல்;
பாடுபடும் விடாமுயற்சி ஊக்கத்தாலே
பாலைவனம் பசுஞ்சோலை ஆகக் கூடும்;
நாடுவதை நல்வழியில் நாடிச் செல்வீர்;
நாட்டுக்கு நன்மகனாய்ச் சிறந்தே வாழ்வீர்;
வாடுகின்றோர் கவலைதனைப் போக்கிவிட்டால்
வாழ்க்கையிலே இருள் விலகி வெளிச்சம் ஆகும்...!

பாரதி பணிச்செல்வர்
கவிஞர் பரந்தூர் இராமசாமி

மகளிர் சுய உதவி குழுக்கள் தயாரிக்கும் பொருட்களுக்கு 'மதி' பொது வணிக பெயர் மற்றும் முத்திரை

தமிழகம் முழுவதிலும் மகளிர் சுய உதவி குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை சந்தைப்படுத்தும் வகையில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்களுடன் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக மகளிர் சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்கள் அனைத்தையும் ''மதி' என்ற பொது வணிக முத்திரையில் (Common Brand) விற்பனை செய்திடத் தீர்மானிக்கப்பட்டு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் மதி' என்ற பெயர் மற்றும் வணிகக் குறியீடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மகளிர் குழுக்களின் தரமான தயாரிப்புப் பொருட்கள் என்பதனை எளிதில் அடையாளப்படுத்தும் விதமாகவும், மக்கள் மற்றும் நுகர்வோர் மனதில் எளிதில் பதியவும் மற்றும் தமிழகம் முழுமைக்கும் ஒரே பெயரில் எளிதில் விளம்பரப்படுத்தும் விதமாகவும், பொருட்களை தயாரிக்கும் அனைத்து மகளிர் சுய உதவி குழுக்களும் தங்கள் மாவட்டத்தில் உள்ள மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தில் (மகளிர் திட்டம்) தங்களின் தயாரிப்புப் பொருட்களை பதிவு செய்து 'மதி' வணிக முத்திரையை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலாண்மை இயக்குநர் தலைவர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்.

`மதி'யால் வெல்லும் மகளிர் கூட்டம்...!

மங்கையராய் பிறப்பதற்கே
மாதவம் செய்திடல் வேண்டுமென்ற
கவிமணியின் கருத்தினையும் தாண்டி,
மகளிர் குழுவில் இருத்தலே
மாபெரும் சக்தி என்றொரு
நிலையாயிற்றே – இன்று

மகளிர் முன்னேற்றம் பெற்றிடயெண்ணி,
அரசின் திட்டங்கள் அடுப்பங்கரைக்கும்
சென்றிட வேண்டி– தோன்றிய துறையே
மகளிர் திட்டமாம்!

அதனை சுருக்கி (மதி) அழைப்பதிலோ
எத்தனை எத்தனை ஆனந்தம்! – ஆம்
நிலவாய், அழகாய், அறிவாய்
அழைக்கப்படும் `மதி'யே
அலுவலகத்தின் பெயரானது பொருத்தமே!

மகளிர் திட்டத்தில் இணைந்த
மதி (நிலவு, அழகு, அறிவு) வடிவானவள்
தன் வாழ்வில் வளம் பெறயெண்ணி
உற்பத்தி செய்யும் பொருட்களெல்லாம்
`மதி' என்ற பெயரிலே,
அவற்றை விற்கும் கடைகளுக்கும்
`மதி' அங்காடிகள் (Kiosk) என்ற பெயரே!

ஒற்றுமைக்கும் சேமிப்புக்கும்
அடையாளமாய் அணிவகுக்கும்
மகளிர் குழுக்கள்
தாங்கள் தயாரிக்கும்
தரமான பொருட்களையெல்லாம்
தரணியெங்கும் விற்றிட
`மதி' என்றோர் முழக்கமே
இனி எங்கும் ஒலிக்குமே...!

செந்தில் பலராமன் (செயலர்)
தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்

மகளிர் சுய உதவி குழுக்களின் வெற்றிக் கதைகள்

சுய உதவி குழு மகளிரின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் அவர்களுக்கு மகளிர் திட்டத்தின் மூலம் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுவதுடன், அவர்கள் வங்கிக் கடன் பெற்று சுய தொழில் மேற்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுகிறது. பல்வேறு பொருட்களை தயாரிக்கும் சுய உதவி குழுவினர் தாங்கள் தயாரிக்கும் பொருட்களை மகளிர் திட்டத்தின் வாயிலாக நடத்தப்படும் விற்பனை கண்காட்சிகளில் அரங்குகள் அமைத்து விற்பனை செய்து வருகின்றனர். மகளிர் சுய உதவி குழுவினர் தயாரிக்கும் தரமான பொருட்களை அனைத்துத் தரப்பினரும் வாங்கிப் பயனடைவதுடன், சுய உதவி குழுவினரும் பொருளாதார வளர்ச்சி பெற்று வருகின்றனர். அவ்வாறு வளர்ச்சி அடைந்து வரும் சுய உதவி குழுக்களின் செயல்பாடுகள் குறித்து அறிந்து கொள்வோம் வாருங்கள்.

நிலா மகளிர் சுய உதவி குழு, அரியலூர் மாவட்டம்

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வட்டாரம், Z மேலூர் வடக்குத் தெருவில் மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலின் கீழ் 2013ஆம் ஆண்டு முதல் நிலா மகளிர் சுய உதவி குழு செயல்பட்டு வருகிறது. மகளிர் திட்டத்தின் கீழ் காளான் வளர்ப்பு குறித்த பயிற்சி பெற்றுள்ள இக்குழுவினர் வங்கிக் கடனாக ரூ. மூன்று லட்சமும், கூட்டமைப்பின் மூலம் ரூ. 75 ஆயிரமும் கடன் பெற்று, அந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு பல்வேறு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். முந்திரி, கம்பு, கேழ்வரகு ஆகிய தானியங்களை விற்பனை, காய்கறி மற்றும் தேநீர் கடை ஆகியவற்றை நடத்தி வருவதுடன், மகளிர் திட்டத்தின் மூலம் நடைபெறும் விற்பனை கண்காட்சிகளில் அரங்குகள் அமைத்து தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தும் வருகின்றனர்.

கோடை மகளிர் சுய உதவி குழு, திண்டுக்கல் மாவட்டம்

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல், செம்மண்மேடு பகுதியில் 2019ஆம் ஆண்டு முதல் மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்பட்டு வரும் கோடை மகளிர் சுய உதவி குழுவானது சுழல் நிதியாக ரூ. 10 ஆயிரம் பெற்றுள்ளது. இக்குழுவின் உறுப்பினர்கள் மரத்தில் கைவினைப் பொருட்கள் செய்தல், இயற்கை முறையில் விளைவித்த காய்கள் பழங்கள் ஆகியவற்றை கொடைக்கானலில் அமைந்துள்ள மதி அங்காடியிலும், மகளிர் திட்டத்தின் மூலம் நடைபெறும் பல்வேறு விற்பனைக் கண்காட்சிகளிலும் தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர்.

ஸ்ரீ சாய்பாபா மகளிர் சுய உதவி குழு, கோயம்புத்தூர் மாவட்டம்

கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர், ஒட்டர்பாளையம் ஊராட்சியில் செயல்பட்டு வரும் ஸ்ரீ சாய்பாபா மகளிர் சுய உதவி குழுவானது 2018ஆம் ஆண்டு மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலின் கீழ் துவங்கப்பட்டது. இக்குழுவில் உறுப்பினராக உள்ளவர்கள் மகளிர் திட்டம் மூலமாக பல்வேறு பயிற்சிகளைப் பெற்றுள்ளனர். மூன்று லட்சம் ரூபாய் வங்கிக் கடன் பெற்று, அத்தொகையை மூலதனமாகக் கொண்டு, மூலிகைகள், கற்றாழை, பப்பாளி, சந்தனம், மஞ்சள், வெட்டிவேர், தேன் ஆகியவற்றால் தயாரிக்கும் சோப்புகள், எண்ணெய் வகைகள், தின்பண்டங்கள் ஆகியவற்றை தயாரித்து விற்பனை செய்துவதுடன், தையல் தொழிலும் மேற்கொண்டு வருகின்றனர். இவர்கள் தயாரிக்கும் பொருட்கள் தரமாக இருப்பதால் வெளியூர்களில் இருக்கும் வாடிக்கையாளர்களுக்கு கூரியர் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது.

பண்ணை மகளிர் சுய உதவி குழு, சிவகங்கை மாவட்டம்

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி தாலுக்கா, அரளிக்கோட்டை கிராமத்தில் 2010ஆம் ஆண்டு மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலின் கீழ் துவக்கப்பட்ட பண்ணை மகளிர் சுய உதவி குழுவானது அரளிக்கோட்டை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைந்து செயல்பட்டு வருகிறது.. இக்குழுவின் உறுப்பினர்களுக்கு மகளிர் திட்டம் மூலம் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இயற்கை விவசாயத்தில் ஈடுபட்டு வரும் இக்குழுவின் உறுப்பினர்கள் சுமார் 12 ஏக்கர் பரப்பளவில் 9 வகையான நெல் சாகுபடி செய்வதுடன், மண்புழு உரம் மற்றும் இயற்கை இடுபொருட்கள் தயாரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். பாரம்பரிய அரிசி வகைகள், மஞ்சள் தூள், மாவு வகைகள், எண்ணை மற்றும் பாக்குமட்டை ஆகியவற்றை விற்பனை செய்து வருவாய் பெற்று வருகின்றனர்.

ஓம்சக்தி மகளிர் சுய உதவி குழு, கடலூர் மாவட்டம்

கடலூர் மாவட்டம், திட்டக்குடி தாலுக்கா, பெருமுளை, புலிவலம் கிராமத்தில் செயல்பட்டு வரும் ஓம்சக்தி மகளிர் சுய உதவி குழுவானது 2020ஆம் ஆண்டு மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலின் கீழ் துவக்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினர்கள் சத்து மாவு, பிஸ்கட் ஆகியவை தயாரித்தல் மற்றும் காளான் வளர்த்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். மகளிர் திட்டம் மூலம் நடைபெறும் கண்காட்சிகளில் அரங்குகள் அமைத்து பல்வேறு மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட சோப்புகள், சீகக்காய் தூள், குளியல் பொடி, பாத்திரங்கள் கழுவும் திரவம், சோப்புத் தூள், பினாயில், ஆவாரம் பூ பூசு மஞ்சள் பொடி போன்றவற்றை விற்பனை செய்து வருகின்றனர்.

தமிழ் மங்கை மகளிர் சுய உதவி குழு, விருதுநகர் மாவட்டம்

விருதுநகர் மாவட்டம், சாத்தூர், கான்வென்ட் தெற்கு தெருவில் செயல்பட்டு வரும் தமிழ் மங்கை மகளிர் சுய உதவி குழுவானது மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலின் கீழ் 2009ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. மகளிர் திட்டத்தின் மூலம் தையல் பயிற்சி, கணினி பயிற்சி மற்றும் சி.ஆர்.பி. பயிற்சி போன்றவற்றைப் பெற்றுள்ள இக்குழுவின் உறுப்பினர்கள், காராசேவு, சீவல் போன்ற தின்பண்டங்களை தயாரித்து உள்ளூர் மற்றும் வெளியூர்களில் விற்பனை செய்து வருகின்றனர். மேலும் இக்குழுவினர் தாங்கள் தயாரிக்கும் பொருட்களை மகளிர் திட்டம் மூலம் நடைபெறும் கண்காட்சிகளிலும் அரங்குகள் அமைத்து விற்பனை செய்து வருகின்றனர்.

மருதாணி மகளிர் சுய உதவி குழு, புதுக்கோட்டை மாவட்டம்

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டாரம், பெருஞ்சுனை, மாணிக்கம்பட்டி ஊராட்சியில் செயல்பட்டு வரும் மருதாணி மகளிர் சுய உதவி குழுவானது, 2010ஆம் ஆண்டு மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலில் துவக்கப்பட்டது. இயற்கை விவசாயம், தொழில் முனைவோர், மதிப்புக் கூட்டுதல், சந்தைப்படுத்துதல் போன்றவை குறித்த பயிற்சிகள் இக்குழுவின் உறுப்பினர்களுக்கு மகளிர் திட்டம் மற்றும் தாட்கோ மூலம் வழங்கப்பட்டுள்ளன. இக்குழுவினர் மற்ற குழுக்களுடன் இணைந்து பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். இயற்கை முறையில் சிறு தானியங்கள், தூய மல்லி, கருப்பு கவுணி, மாப்பிள்ளை சம்பா போன்ற பாரம்பரிய நெல் வகைகளை விளைவித்தல், சத்து மாவுகள், மிக்சர், அதிரசம், முருக்கு, லட்டு, பக்கோடா போன்ற பலவிதமான தின்பண்டங்களையும் தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். மேலும் மரச் செக்கு மூலம் எண்ணெய் வகைகளும் தயாரிக்கப்படுகிறது.

ஜான்சிராணி மகளிர் சுய உதவி குழு, திருவண்ணாமலை மாவட்டம்

திருவண்ணாமலை மாவட்டம், ஜமுனாமரத்தூர் வட்டாரம், மேல்சிலம்பட்டி ஊராட்சி, மேல்விளமுச்சி கிராமத்தில் 2011ஆம் ஆண்டு மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலில் துவக்கப்பட்ட ஜான்சிராணி மகளிர் சுய உதவி குழுவின் உறுப்பினர்கள் தேனீ வளர்த்து தேன் எடுத்தல், புளி பதப்படுத்துதல், மிளகு மற்றும் சாமை போன்ற இயற்கை பயிர்கள் விளைவித்தல் போன்ற பயிற்சிகளை பெற்றுள்ளனர். இக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் கூட்டாக இணைந்து தேன், புளி, சாமை அரிசி, மிளகு, கொள்ளு, எள்ளு, கம்பு போன்ற இயற்கை பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர். மகளிர் திட்டத்தின் மூலம் நடைபெறும் கண்காட்சிகளிலும் அரங்குகள் அமைத்து தங்களின் தயாரிப்பு பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர்.

அப்துல் கலாம் மகளிர் சுய உதவி குழு, நாமக்கல் மாவட்டம்

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டாரம், தேவனாங்குறிச்சி ஊராட்சியில் செயல்பட்டு வரும் அப்துல் கலாம் மகளிர் சுய உதவி குழுவானது 2010ஆம் ஆண்டு மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலில் துவக்கப்பட்டதாகும். தேவனாங்குறிச்சி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைந்துள்ள இக்குழுவின் உறுப்பினர்களுக்கு மகளிர் திட்டம் மூலம் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆண்களுக்கான சட்டைகள் தயாரித்தல், லுங்கி மற்றும் வேட்டிகள் நெய்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டு வரும் இக்குழுவினர், தாங்கள் தயாரிக்கும் ஆடை வகைகளை உள்ளூர் மற்றும் வெளியூர்களில் விற்பனை செய்வதுடன், மகளிர் திட்டத்தின் மூலம் நடைபெறும் கண்காட்சிகளிலும் அரங்குகள் அமைத்து தங்களின் தயாரிப்பு பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர்.

துர்க்கை மகளிர் சுய உதவி குழு, தருமபுரி மாவட்டம்

தருமபுரி மாவட்டம், இலக்கியம்பட்டி, அண்ணா நகர் பகுதியில் மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலில் 2020ஆம் ஆண்டு அப்துல் கலாம் மகளிர் சுய உதவி குழு துவக்கப்பட்டது. இலக்கியம்பட்டி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைந்துள்ள இக்குழுவின் உறுப்பினர்கள் மகளிர் திட்டம் மூலம் வழங்கப்பட்ட அடிப்படை பயிற்சிகளைப் பெற்றுள்ளனர். சமுதாய முதலீட்டு நிதி மற்றும் ஆதார நிதி ஆகியவற்றைப் பெற்றுள்ள இக்குழு தற்போது வங்கிக் கடன் பெற தர மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பாரம்பரிய அரிசி வகைகள் விற்பனை, சத்து மாவு மிக்ஸ் தயாரித்தல், முளை கட்டிய தானியங்களால் தயாரிக்கப்படும் மாவு வகைகள், பாரம்பரிய உணவு பொருட்கள் தயாரித்தல் போன்ற நடவடிக்கைகளில் இக்குழுவின் உறுப்பினர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தயாரிக்கும் பொருட்கள் உள்ளூர், வெளியூர் மற்றும் மகளிர் திட்ட கண்காட்சிகள் போன்றவற்றில் விற்பனை செய்யப்படுகின்றன.

அன்னை இந்திரா மகளிர் சுய உதவி குழு, விழுப்புரம் மாவட்டம்

விழுப்புரம் மாவட்டம், கோட்டைக்குப்பம், நாட்டாமை தெரு பகுதியில் மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலின்படி 1999ஆம் ஆண்டு முதல் அன்னை இந்திரா மகளிர் சுய உதவி குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்கள் மகளிர் திட்டம் மூலம் வழங்கப்பட்ட அடிப்படை பயிற்சிகளையும், பாய் நெய்தல் குறித்த பயிற்சியையும் பெற்றுள்ளனர். சுழல் நிதி, நேரடிக் கடன் மற்றும் மானியக் கடன் ஆகியவற்றைப் பெற்றுள்ள இக்குழுவின் உறுப்பினர்கள் பல்வேறு வகையான பாய்கள், திரைச்சீலைகள், மேசை விரிப்புகள், பைகள் போன்றவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். இவர்கள் தயாரிக்கும் பொருட்கள் வெளியூர்கள் மட்டுமல்லாது வெளி மாநிலங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

கோடை காலத்தை வெல்வது எப்படி?

தினமும் 3 முதல் 4 லிட்டர் வரை தண்ணீர் குடிக்க வேண்டும். காபி, தேநீர் மற்றும் வாயு நிரப்பப்பட்ட செயற்கை மென்பானங்களை குடிப்பதைவிட இளநீர், மோர், பதநீர், பழச்சாறுகள், லஸ்ஸி ஆகிய இயற்கை பானங்களை குடிக்கவும். எலுமிச்சை சாற்றில் உப்பு அல்லது சர்க்கரை சேர்த்து சாப்பிடுவது நல்லது. தர்பூசணி, நுங்கு, வெள்ளரி, கொய்யா, பப்பாளி, சாத்துக்குடி ஆரஞ்சு, திராட்சை, பலாப்பழம், அன்னாசி போன்ற நீர்ச்சத்து நிறைந்த பழங்களையோ பழச்சாறுகளையோ அடிக்கடி சாப்பிடுங்கள். காரம் மற்றும் மசாலா நிறைந்த உணவுகள், எண்ணெய் பலகாரங்கள், பேக்கரிப் பண்டங்கள், அசைவ உணவுகள் ஆகியவை தண்ணீர் தாகத்தை அதிகப்படுத்தும் என்பதால் குறைத்து கொள்ளுங்கள். இட்லி, இடியாப்பம், தயிர்சாதம், மோர்சாதம், கம்பங்கூழ், வெங்காயப் பச்சடி, வெள்ளரி சாலட், பொன்னாங்கண்ணிக் கீரை, பீட்ரூட், கேரட், முள்ளங்கி, பாகல், தக்காளி ஆகியவை சிறந்த கோடை உணவுகள்.

ஆரஞ்சுப்பழம் அளிக்கும் நன்மைகள்

நாம் உண்ணும் ஆரஞ்சு பழத்தை 'கமலா பழம்' என்றும் அழைப்பதுண்டு. இந்த வகை ஆரஞ்சுபழமானது எண்ணற்ற நன்மைகளை நமக்கு வாரி வழங்குகிறது. ஆரஞ்சுபழத்தில் ஏ, பி, சி ஆகிய சத்துகள் மிக அதிக அளவில் கலந்துள்ளன. சுண்ணாம்பு சத்தும், இரும்பு சத்தும் கூட அதிக அளவு காணபடுகின்றன.

நோய் படுக்கையில் இருக்கும்போது நோயாளிகளுக்கு எந்தவித உணவும் ருசிக்காது. அதனால் அவர்கள் உணவையே தள்ளிவிட முயற்சிப்பார்கள். உணவே இல்லாத நிலையில், உடல் மேலும் சோர்வடையும். இந்த குறைப்பாட்டை தவிர்க்க நோயாளிகளுக்கு ஆரஞ்சு பழச்சாறு கொடுக்க சொல்வார்கள். நோயாளிகளுக்கும் ஆரஞ்சு பழச்சாறு நன்கு ருசிக்கும்.

தாய்ப்பால் பற்றாக்குறையால் தவிக்கும் குழந்தைகளுக்கு ஆரஞ்சு பழச்சாறு அருமையான உணவாக பயன்படுகிறது. ஆனால், கைக்குழந்தைகளாக இருந்தால் ஆரஞ்சு பழச்சாற்றுடன் சரிபாதி அளவு தண்ணீர் கலந்து கொடுக்க வேண்டும். ஒரு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு தனித்த சாறாகவே கொடுத்து விடலாம் அல்லது பழத்தை உரித்து கொடுத்து உண்ண சொல்லலாம்.

அஜீரணக் குறைபாடுகளைச் சரிசெய்யும் ஆற்றல் இந்த ஆரஞ்சு பழச்சாறுக்கு உண்டு. அஜீரண கோளாறு காரணமாக பேதியாகும்போது ஆரஞ்சு பழச்சாற்றைக் கொடுத்தால் உடன் பேதி நின்று நல்ல குணம் கிடைக்கும். இரவில் தூக்கம் வராமல் தவிப்போர் தூங்க செல்லும்முன் நூறு மி.லி. ஆரஞ்சு பழச்சாறுடன் இரண்டு தேக்கரண்டி அளவு தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் நல்ல தூக்கம் பெறலாம்.

இதேபோல் ஒன்றுவிட்டு ஒருநாள் சாப்பிட்டு வந்தால் உறக்கக்கேடு நிரந்தரமாக நீங்கி நிம்மதியான தூக்கத்தை பெறலாம். ஆரஞ்சு பழச்சாறு பற்களை வலிமைப்படுத்தக் கூடியது. மேலும் பற்கள் தொடர்பான அனைத்து குறைபாடுகளையும் அகற்றும் தன்மை இதற்கு உண்டு.

இத்தகைய நற்பண்புகளை கொண்டுள்ள இந்த ஆரஞ்சு பழத்தில் வைட்டமின் 'ஏ' உயிர்ச்சத்து 99 மில்லிகிராம் உள்ளது. மேலும் வைட்டமின் பி1 34 மில்லி கிராமும், பி2, 17 மில்லி கிராமும், சி19 மில்லி கிராம் என்ற அளவில் அமைந்துள்ளன. அதில் காணப்படும் சுண்ணாம்பு சத்தின் அளவு 14 மில்லிகிராம் ஆகும். இத்தனை பயன்களை கொண்ட இந்த ஆரஞ்சுப்பழத்தை பயன்படுத்துவோம், ஆரோக்கியம் பெறுவோம்.

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd.,
Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029.
Published from (86,800 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,
Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN

22-ம் ஆண்டில் வெற்றிநடை போடும் முற்றம்

- சுய உதவி குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!
- முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின் ஆதரவை தாருங்கள்!
- முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

முற்றம் இதழின் சந்தா விபரம்

ஒரு ஆண்டு	ரூ. 200
இரண்டு ஆண்டு	ரூ. 400
மூன்று ஆண்டு	ரூ. 600

விளம்பரக் கட்டணம் (ஒரு இதழிற்கு)

அட்டையின் 2-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் 3-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும். பரிசும் வழங்கப்படும்.

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
மேலாளர், முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம், 3வது மாடி,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.



RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2021-2023 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2021-2023
Date of Publication : 1st Week of the every month

தொழில் முனைப்பில் வளர்ச்சி!
ஊரக மக்கள் மகிழ்ச்சி!

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (TNRTP)

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

5வது தளம், திரு.வி.க. தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை- 600032, தமிழ்நாடு

(044) 434 43200 | tnrtpstate@gmail.com | www.tnrtp.org TNRTP tn_rtp tn_rtp